பக்கங்கள் : எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 ஐப்பசி 29 வியாழக்கிழமை (15.11.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 349

### பயங்கரவாத நடவடிக்கை தொடரும் வரை

# படுகொலை, காணாமற்போதல்கள் தொடர்ந்து நடைபெறவே செய்யும்!

## இராணுவத் தளபதி சொல்கிறார்



கொழும்பு, நவம்பர் 15

**"இலங்கையில் பயங்கரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகள் தொடரும்வரை காணாமற்போதலும் படுகொலைகளும் தொடரவே செய்யும்."**

**- பிரிட்டிஷ் புலனாய்வுச் செய்தியாளர்களுக்கு இவ்வாரம் அளித்த பேட்டியில் இலங்கை இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சரத் பொன்சேகா இவ்வாறு கூறியிருக்கின்றார்.**

இவ்விவகாரம் குறித்து விரிவான செய்திகளை இணையத்தளங்கள் வெளியிட்டிருக்கின்றன. அவற்றில் கூறப்பட்டிருப்பவை வருமாறு:-

புதிதாக அரசுப் படைகளினால் கைப்பற்றப்பட்ட கிழக்கு மாகாணத்தில் மனித உரிமைகள் துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றமை குறித்துக் கேட்டபோது, "இந்தப் பிரதேசம் சாதாரண பகுதி அல்ல. எனவே, அங்கு பயங்கரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகள் தொடரும்வரை ஆள்கள் கொல்லப்படுவதும் சிலர் காணாமல் போவதும் தொடரவே செய்யும்" - என்று தளபதி பதிலளித்தார்.

இலங்கை தொடர்பாக 'சனல் - 4' சேவையில் 'உலகுக்குத் தெரியவராத விடயங்கள்' என்ற தலைப்பில் இடம்பெற்ற நிகழ்ச்சியில், இலங்கையின் வடக்கு, கிழக்கில் பொதுமக்கள் தொடர்ந்து கடத்தப்படுகின்றமை மற்றும் கொல்லப்படுகின்றமை

(07ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவில் நேற்றுக் குண்டுவீச்சு!

கொழும்பு,நவ.15

முல்லைத்தீவுப் பிரதேசத்தில் விமானப் படை விமானங்கள் நேற்றுக்காலை குண்டு வீச்சுக்களை நடத்தியுள்ளன.

முல்லைத்தீவுக்கு மேற்காகவுள்ள விடுதலைப்புலிகளின் முகாம் ஒன்றும் மற்றும் அலம்பில் கடற்கரையோரப் பகுதியில் கடற்புலிகள் படகுகளை நிறுத்தி வைக்கும் இடம் ஒன்றும் தாக்கப்பட்டுள்ளன.

இதன்போது விடுதலைப் புலிகளுக்குப் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளன என்று தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையம் தெரிவித்திருக்கின்றது. இத்தாக்குதல் சம்பவம் தொடர்பாக விடுதலைப் புலிகள் தரப்பில்இருந்து நேற்றிரவு வரை தகவல்கள் எவையும் வெளியாகவில்லை. (சி)

## 'பட்ஜெட்'டுக்கு ஆதரவு தராவிட்டால் ஆட்சியைக் கலைத்துவிடுவோம்!

### ஜே.வி.பிக்கு அரசாங்கம் பதிலடி

கொழும்பு,நவ.15

வரவு - செலவுத் திட்டத்துக்கு ஜே.வி.பி. ஆதரவு வழங்காவிட்டால் ஆட்சியைக் கலைத்து விடப்போவதாக அரசுத் தலைமை அக்கட்சிக்கு அறிவித்துள்ளதாக கொழும்பு அரசியல் வட்டாரங்களில் இருந்து அறிய வந்துள்ளது.

வரவு - செலவுத் திட்டத்துக்கு (பட்ஜெட்டுக்கு) ஆதரவு வழங்குவதற்கு ஜே.வி.பி நான்கு நிபந்தனைகளை வைத்து அரசுக்கு ஆறுநாள் காலக்கெடு விதித்திருந்தது தெரிந்ததே.

ஜே.வி.பியால் முன்வைக்கப்பட்ட நிபந்தனைகள் பலவற்றை அரசு நிறைவேற்றியுள்ளது என்றும் -

(08ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ முகாம் சூழலில் உள்ள மன்னார் மக்களை வெளியேற உத்தரவு

### புலிகள் விடுத்திருப்பதாக ரம்புக்வெல சொல்கிறார்

கொழும்பு,நவ.15

மன்னார் மாவட்டத்தில் உள்ள இராணுவ முகாம்களை அண்மித்த 5 கிலோ மீற்றர் சுற்றளவில் வசிக்கும் அனைவரையும் தமது இருப்பிடங்களில் இருந்து எதிர்வரும் 27ஆம் திகதிக்கு முன் வெளியேறும்படி கோரும் துண்டுப் பிரசுரங்களை விடுதலைப் புலிகள் விநியோகித்துள்ளனர் என தேசிய பாதுகாப்புப் பேச்சாளரும் அமைச்சருமான ஹெகெலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தைப் போன்று வடக்கிலும் அரச படைகள் ஸ்திரப்படுத்தப்பட்டுள்ளன. இதனால் படையினரை நேரடியாக முகம் கொடுக்க முடியாத புலிகள்

(08ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் பொருத்தப்பட்டுள்ள அமெ.ராடர் மூலம் இந்தியத் தளங்களை வேவுபார்க்க முடியுமென அச்சம்!

கொழும்பு,நவ.15

வவுனியாவில் தற்போது அமைக்கப்பட்டுள்ள அமெரிக்காவின் ராடர் கருவி மூலம் இந்தியாவின் தென்பகுதியில் உள்ள முக்கிய படைத் தளங்களை அவதானிக்க முடியும் என்று இந்திய படை நிபுணர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

இந்தியாவிலிருந்து வெளிவரும் 'ரைம்ஸ் நவ்'(Times Now) என்ற பத்திரிகை இத்தகவலை வெளியிட்டுள்ளது

அமெரிக்கா நவீன ராடர் கருவிகளை இலங்கைக்கு வழங்கியுள்ளது. பயங்கரவாதத்துக்கு எதிரான போருக்கு என்று இக்கருவியை அமெரிக்கா வழங்கிய போதிலும் இந்தியாவின தென்பகுதிப் படைத் தளங்களை உளவு பார்க்கும் வலுக்கொண்ட இந்த ராடரால் இந்தியா ஆழ்ந்த அக்கறை செலுத்துகிறது.

திருவனந்தபுரத்துக்கு அருகில் உள்ள 'தும்பா' ஏவுகணை செலுத்தித் தளம், கல்பாக்கம் அணுவாயுத தளம், விசாக பட்டினத்தில் உள்ள கடற்படை கட்டுமானத் தளம் என்பன உட்பட பல்வேறு தளங்களை இந்த ராடர் மூலம் அவதானித்து வேவு பார்க்க முடியும்.

(08ஆம் பக்கம் பார்க்க)

## விஜயதாஸ நேற்று எதிரணிக்குத் தாவினார்

கொழும்பு,நவ.15

ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினரும் பொது முயற்சி நிறுவனங்கள் தொடர்பாக விசாரணை செய்யும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் ('கோப்' அமைப்பின்) தலைவருமான விஜயதாஸ ராஜபக்ஷ நேற்று நாடாளுமன்றில் எதிர்த்தரப்புக்குத் தாவினார்.

அரசு உடனடியாக நிறைவேற்ற வேண்டிய விடயங்கள் எனத் தெரிவித்து ஏழு கோரிக்கைகளையும் அவர் முன்வைத்தார்.

(08ஆம் பக்கம் பார்க்க)

## 'இலங்கையில் துடிப்பது நமது உயிர்-தமிழ் உயிர்'

சென்னை,நவ.15

தமிழகத்தில் இருந்து வெளிவரும் 'குமுதம்' வாரசஞ்சிகை தனது ஆசிரியர் தலையங்கத்தில் 'இலங்கையில் துடிப்பது நமதுஉயிர் -தமிழ் உயிர்' என்று தெரிவித்திருக்கிறது. ஆசிரியர் தலையங்கம் வருமாறு:-

போர்என்ற அறிவிப்புமட்டும்தான் வெளிப்படையாகஇல்லை.ஆனால்புகை மண்டலம் எழுந்து அடங்குகின்றது.உயிர்கள்பொசுங்கும் நெடியடிக்கிறது.

அநுராதபுரத்தில் ஒக்ரோபர் மாதத்தில் நடந்த தாக்குதலின்போது உயிர் நீத்த விடுதலைப் புலிகளின் சடலங்களைக் கூட அகௌரவப்படுத்தி அவர்களுடைய

(08ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் விமானங்கள் அநுராதபுரத்தில் பறந்தன என்பது விசமத்தனமான வதந்தி

### அரசின் பாதுகாப்புப் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு,நவ.15

அநுராதபுர வான்பரப்பில் நேற்று முன்தினம் விமானங்கள் இரண்டு வட்டமிட்டுப் பறந்தன எனத் தெரிவித்து பெரும் பரபரப்பை ஏற்படுத்திய செய்தியில் எந்த விதமான உண்மையும் இல்லை.

இது மக்களைப் பீதியடையச் செய்து விரும்பத்தகாத அசம்பாவிதங்களை ஏற்படுத்துவதற்காகக் கிளப்பிவிடப்பட்ட விசமத்தனமான வதந்தியாகும். இது குறித்துப் பொது மக்கள் பீதியடைய வேண்டிய அவசியம் இல்லை என்றார் பாதுகாப்புப் பேச்சாளரான அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல.

தேசிய பாதுகாப்புத் தகவல் மையத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்கும் போதே அமைச்சர் இப்படிக் கூறினார்.

'நேற்று முன்தினம் அதிகாலை 5.12 மணியளவில் அநுராதபுரம் வான்பரப்பில் புலிகளின் விமானங்கள் இரண்டு பறந்தன. படைத் தரப்பினரும் அவற்றை நோக்கி

(08ஆம் பக்கம் பார்க்க)

## கஸ்தூரியார் வீதியில் நேற்றுக்காலை இளைஞர் ஒருவரின் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், நவ.15

யாழ்.கஸ்தூரியார் வீதியில், யாழ். இந்துக் கல்லூரி மைதானத்துக்குச் சமீபமாக நேற்றுக்காலை இளைஞர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக யாழ். நீதிவான் இ.த.விக்னராஜா விசாரணைகளை நடத்தினார்.

மனோகராச் சந்தி முகாமில் இருந்து ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த படையினர் மீது கிரனேட் தாக்குதலை நடத்த மூவர் முனைந்தனர். அவர்கள் மீது வேட்டுக்கள் தீர்த்ததில் ஒருவர் கொல்லப்பட்டார் மற்றைய இருவரும் தப்பிவிட்டனர். - என்றும் படைத்தரப்பினர் விசாரணையின் போது தெரிவித்தனர்.

(08ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 46 வது ஆண்டு நிறைவை கொண்டாடும் முகமாக...

## மக்கள் வங்கியின்

# ஜய ஶ்ரீ

ජය ශ්‍රී Jaya Sri

## மாபெரும் பரிசுப்போட்டி 2007

### 2007 செப்ரெம்பர் மாதம் CDMA தொலைபேசிகளை வென்ற வெற்றியாளர்கள்

[illegible]

Licence No. G/93/2007

*SC - சேவை நிலையங்கள்

வருட இறுதியில் பரிசினை வெல்ல நீங்கள் செய்ய வேண்டியது, 2007 ஒக்டோபர், நவம்பர், டிசெம்பர் ஆகிய மாதங்களில் மக்கள் வங்கியின் சேமிப்புக் கணக்கில் ரூ. 20,000/- அல்லது நடைமுறை கணக்கில் ரூ. 10,000/- த்தினை குறைந்தபட்ச மீதியாக பேணி வருவது மட்டுமே.

**நீங்களும் ஒரு வெற்றியாளர் ஆகுங்கள்!**

மக்கள் வங்கி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூர் உணவு உற்பத்தியை மேம்படுத்த விவசாயிகளிடையே பயிர்ச்செய்கைப் போட்டி

யாழ்ப்பாணம், நவ.15

உள்ளூர் உணவு உற்பத்தியைத் துரிதப் படுத்துவதற்காவும் உற்பத்தியில் தன்னி றைவு காண்பதற்காகவும் வடக்கு மாகாண விவசாயத் திணைக்களத்தால் தேசிய வேலைத்திட்டம் 2007- 2010 இன் கீழ் விவ சாயிகளிடையே பயிர்ச் செய்கை தொடர்பான போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

கிராமிய வீட்டுத்தோட்ட அமைப்பு, மாண வர் வீட்டுத்தோட்ட அமைப்பு, பாடசாலைத் தோட்ட அமைப்பு, நகர வீட்டுத்தோட்ட அமைப்பு, அலுவலக வளாக வீட்டுத்தோட்ட அமைப்பு ஆகிய தலைப்புகளில் ஏதேனும் ஒன்றில் மட்டும் ஒரு செய்கையாளர் போட் டியிடலாம்.

போட்டிகள் மாவட்ட மட்டத்திலும் மாகாண மட்டத்திலும் நடத்தப்படவுள்ளன.

மாவட்ட மட்டத்தில் ஒவ்வொரு தலைப் பிலும் சிறந்த மூன்று போட்டியாளர்களும் மாகாணமட்டத்தில்ஒவ்வொரு தலைப்பிலும் சிறந்த ஒரு போட்டியாளரும் தெரிவு செய் யப்பட்டு பணப்பரிசில்களும் சான்றிதழ் களும் வழங்கப்படும்.

சகல தோட்ட அமைப்பாளர்களும் இப் போட்டியில் பங்குபற்ற முடியும். பங்குபற்ற விரும்பும் பயிர்ச்செய்கை அபிவிருத்தியா ளர்கள் தங்கள் பகுதியிலுள்ள விவசாயப் போதனாசிரியரிடம் போட்டிக்கான விண் ணப்பப்படிவத்தைப் பெற்றுப் பூர்த்தி செய்து எதிர் வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் நேரிலோ தபாலிலோ கையளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

போட்டிக்கான நிபந்தனைகளை கமநல சேவை நிலையங்கள், பிரதேச செயலகங்கள், வலயக் கல்வித்திணைக்களங்கள் ஆகிய இடங்களில் பார்வையிடலாம். (202)

**'நிகொட்' திட்டத்தின் கீழ்**

## குடாநாட்டில் 1, 458 மில்லியன் ரூபா செலவில் 159 அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுப்பு

நல்லூர், நவ.15

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியு தவியுடன் 'நிகொட்' திட்டத்தின் மூலம் குடா நாட்டின் ப்ல்வேறு பிரதேசங்களிலும் ஆயி ரத்து 458 மில்லியன் ரூபா செலவில் அபிவிருத்தித் திட்டங்கள் செயற்படுத் தப்படவுள்ளன.

2009 ஆம் ஆண்டின் இறுதிவரை 159 திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள் ளன.

'நிகொட்' திட்டத்தின்கீழ் ஏற்கனவே யாழ்ப் பாணத்தில் உள்ள பாடசாலைகள், ஆஸ் பத்திரிகள் ஆகியவற்றுக்கான கட்டடப் பணிகள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

10 மில்லியன் ரூபா செலவில் அள வெட்டி அருணோதயா பாடசாலையும் 8 மில்லியன் ரூபா செலவில் சண்டிலிப்பாய் கமநலசேவைக் கட்டடப் பணிகளும் மேற் கொள்ளப்பட்டு பூர்த்தியடைந்து உரிய அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளன. 7 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப் பட்ட சுண்டிக்குளி பெண்கள் கல்லூரி கட் டடமும் கையளிக்கப்படவுள்ளது.

'நிகொட்' திட்டத்தின் கீழ் இதுவரை 700 மில்லியன் ரூபா செலவில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (202-111)




## நவாலி கிழக்கில் பங்கீட்டு அட்டை மீளாய்வு

நவாலி, நவ.15

நவாலி கிழக்கு ஜே/135 கிராம சேவை யாளர் பிரிவில் நிவாரணம் பெறுபவர்க ளின் சகல பங்கீட்டு அட்டைகளும் அப் பிரிவு கிராம சேவையாளரால் மீளாய்வு செய்யப்பட்டு வருகின்றது.

இதுவரை மீளாய்வு செய்யாதவர்கள் உடன் மீளாய்வு செய்யுமாறு கிராம சேவை யாளர் ரி.நித்தியானந்தம் கேட்டுள்ளார். (202-100)

## சாவகச்சேரி மருத்துவமனையில் பிரேதஅறை அமைக்குமாறு பொது அமைப்புகள் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ.15

சாவகச்சேரி மாவட்ட மருத்துவமனை யில் பிரேத பராமரிப்புக் கட்டடம் அமைப் பதுடன் பிரேத வண்டியும் கொள்வனவு செய்ய உடன் நடவடிக்கை எடுக்குமாறு பொது அமைப்புகள் கோரியுள்ளன.

அண்மையில் தென்மராட்சி பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற பிரதேச ஒருங் கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளாலும் வைத் தியசாலை நிர்வாகத்தினராலும் இக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பிரதேசத்தில் வெற்றிடமாக வுள்ள திடீர் மரண விசாரணை அதிகாரி பதவிக்கு தகுந்த அதிகாரி ஒருவரை நிய மிக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் கோரப்பட்டுள்ளது. (202-207)

## பரீட்சைகள்

யாழ்ப்பாணம், நவ.15

உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான புள்ளி விவரவியல் பகுப்பாய்வு முகாமைத்துவப் பாடப் பரீட்சை நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நிறுவன மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (202)

* * *

யாழ்ப்பாணம், நவ.15

யாழ்.பல்கலைக்கழகத்தின் பட்டப்பின் படிப்புகள் பீடத்தினால் வவுனியா வளாகத் தில் நடத்தப்படும் பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கைநெறி மாணவர்களுக் கான முதலாம் வருடத்திற்கான பரீட் சைகள் எதிர்வரும் 28 ஆம் திகதி ஆரம் பமாகவுள்ளன.

அத்துடன் யாழ்.பல்கலைக்கழகத்தின் பட்டப்பின் கல்வி டிப்ளோமா இரண்டாம் வருடத்திற்கான பரீட்சைகள் டிசெம்பர் முதலாம் திகதி ஆரம்பமாகவுள்ளன என்று பட்டப்படிப்புகள் பீடாதிபதி க.கந்த சாமி தெரிவித்துள்ளார்.

பரீட்சைக்கு விண்ணப்பித்த மாணவர் கள் பரீட்சை அனுமதி அட்டை, நேர அட் டவணை என்பவற்றை பட்டப்படிப்புகள் பீட பீடாதிபதி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.

இதேவேளை- 2007/08 புதிய கல்வி யாண்டுக்கான முதுகலைமாணி, கல்வியி யல் முதுகலைமாணி மற்றும் நூலகத் தகவல் விஞ்ஞான பட்டப்பின் டிப்ளோமா கற்கை நெறிக்கு புதிய அனுமதிக்கு விண் ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன என்று அவர் மேலும் கேட்டுள்ளார். (203)

## இரு பிரதேச செயலகப் பிரிவுகளின் அபிவிருத்திப் பணிக்கு நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், நவ.15

நல்லூர், வேலணை பிரதேச செயலகப் பிரிவுகளின் அபிவிருத்திப் பணிகளுக் கென தேசிய கட்டட அபிவிருத்தி அமைச்சு நிதி ஒதுக்கியுள்ளது.

மஹிந்த சிந்தனைக்கமைவாக நல்லூர் பிரதேச செயலகப் பிரிவில் சில அபிவிருத் திப் பணிகளுக்கென அமைச்சு 40 லட்சம் ரூபா நிதி ஒதுக்கியுள்ளது.

திருநெல்வேலி பொதுச்சந்தையின் கட்டட புனரமைப்புக்கென 30 லட்சம் ரூபா வும்-

நல்லூர் சீக்கோ கூட்டுறவுச் சங்க வலு வூட்டலுக்கென 10 லட்சம் ரூபாவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

புங்குடுதீவு பிரசவ விடுதிக் கட்டட புனரமைப்புக்கென அமைச்சு துரிதப்படுத் தப்பட்ட அபிவிருத்தித் திட்டத்தில் நிதி ஒதுக்கியுள்ளது.

வேலணை பிரதேச செயலர் பிரிவில் துரிதப்படுத்தப்பட்ட அபிவிருத்தித் திட் டத்தின் கீழ் வேலணை கிராமிய வைத்திய சாலைக்கு 10 லட்சம் ரூபாவும்-

வேலணை வடக்கு கலாசார மண்டபத்திற்கு 10 லட்சம் ரூபாவும் பழ உற்பத்திக் கிராம அபிவிருத்திக்கு 3 லட்சத்து 70 ஆயிரம் ரூபாவும் பனங்கட்டி மற்றும் தென்னை வள உற்பத்திப் பொருள்களுக்காக பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கத்திற்கு 10 லட்சம் ரூபாவும் மீன்பிடி கூட்டுறவுச் சங்க அலுவலக கட்டடத்திற்கு 15 லட்சம் ரூபாவும் புங்குடுதீவு நயினாதீவு பல நோ. கூ.சங்கப் படகு புனரமைப்புக்கு 30 லட்சம் ரூபாவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள் ளது. (202-111)

## மாதகலில் மிதிவெடி அகற்றப்பட்ட வயற்காணிகளில் விதைப்பு ஆரம்பம்

வலி.தென்மேற்கு, நவ.15

மாதகலில் பாணாவெட்டி, சூளானை ஆகிய பகுதிகளில் மிதிவெடி அகற்றப்பட்ட வயற் காணிகளில் இம்முறை நெற் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சுமார் 12 வருடகாலமாக மிதிவெடி அபா யத்தினால் இப் பகுதிகளிலுள்ள 500 பரப்பு விஸ்தீரணமுடைய வயற்காணிகள் செய்கை பண்ணப்படாத நிலையில் தரிசாக இருந்தன.

''ஹலோ ரஸ்ட்'' நிறுவனம் இப்பகுதி களில் புதைக் கப்பட்ட மிதி வெடிகளை அகற்றிக் கொடுத்ததை அடுத்து இவ் வருடம் விவசாயிகளால் காலபோக நெல் விதைப்பு மேற்கொள்ளப்பட்டிருப்பதாக மாதகல் விவசாயிகள் சம்மேளனத் தலை வர் வி.சிற்றம்பலம் தெரிவித்தார். (202-135)



நல்லூர் பிரதேச செயலக சிறுவர், முதியோர் தினவிழா அண்மையில் திருநெல்வேலி கருணாலய சிறுவர் இல்லத்தில் நடைபெற்றது.

விழாவில் நல்லூர் பிரதேச செயலர் பி.செந்தில்நந்தனன் உரையாற்றுவதையும் நல்லூர் கோட்டப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற பட்டிமன்றத்தில் பரிசுபெற்ற ஸ்ரான்லி கல்லூரி மாணவி உரையாற்றுவதையும் [illegible] பிள்ளை மூதாட்டி ஒருவருக்கு மாலை அணிவித்து பரிசில் வழங்கிக் கௌரவிப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்: லக்ஸ்மன்)

## முகாமைத்துவ போட்டியில் ஊர்காவற்றுறை உ.அ.அ. அலுவலகம் முதலிடம்

யாழ்ப்பாணம், நவ.15

யாழ்.மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்களுக்கிடையில் நடத்தப்பட்ட முகாமைத்துவப் போட்டியில் ஊர்காவற் றுறை உதவி அரச அதிபர் பணிமனை முத லிடம் பெற்றுள்ளது.

போட்டிகளில் முதலிடம் பெற்ற பிர தேச செயலகங்களுக்கான பரிசில்கள் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொழும்பு பண்டாரநா யக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் கே.ஸ்ரீமோகனன், உதவி அர சாங்க அதிபர் பணிமனையைச் சேர்ந்த வீ. தயாபரன் ஆகியோர் கலந்து கொள்வார் கள். (202-111)

## பொறியியலாளர் நியமனம்

குருநகர், நவ.15

யாழ்.பிராந்திய சுகாதார சேவைப் பணிப் பாளர் பணிமனையின் உயிரியல் மருத்துவ பொறியியலாளராக ப்சில் ராஜ்குமார் நிய மிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை இப் பதவியில் இருந்த ஜே. கமலேந்திரன் இலங்கை மின்சார சபைக்கு பொறியியலாளராக நியமனம் பெற்றுச் சென்றதையடுத்து ராஜ்குமார் யாழ்.பிராந் திய சுகாதார சேவைகள் பணிப்பாளரால் நியமனம் செய்யப்பட்டார்.

யாழ்.மாவட்டத்திலுள்ள வைத்தியசா லைகள் மற்றும் சுகாதார வைத்திய அதி காரி பணிமனைகளிலுள்ள மருத்துவ உப கரணங்கள் மற்றும் இயந்திரங்களின் திருத்த வேலைகள் மேற்படி பிரிவினரா லேயே மேற்கொள்ளப்பட்டு வருகின் றமை குறிப்பிடத்தக்கது. (202-51)

## பயிர்களை முயல்கள் நாசம் செய்கின்றன

நவாலி, நவ.15

நவாலி கல்லுண்டாய்ப் பகுதி வயல்களி லுள்ள நெற் பயிர்களை முயல்கள் அறுத்து நாசப்படுத்துவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

பல ஆயிரம் ரூபா செலவில் செய்கை பண்ணப்பட்டுள்ள நெற் பயிர்களை அப் பகுதி காடுகள், பற்றைகள் என்பனவற்றில் ஒளிந்திருக்கும் முயல்கள் ஆள்கள் இல்லாத நேரங்களில் அறுத்து சேதப்படுத்தி வரு வதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (202-100)

## வயாவிளானில் 20 குடும்பங்களுக்கு திருமணப் பதிவு

வலி.வடக்கு, நவ.15

தெல்லிப்பழை பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட வயாவிளான் குட்டியபுலம் பகு தியில் திருமணப் பதிவு செய்யாத இருபது குடும்பங்களுக்கு திருமணப்பதிவுகள் செய்து வைக்கப்பட்டுள்ளன.

தெல்லிப்பழை பிரதேச செயலாளர் எஸ். முரளிதரன் தலைமையில் இத் திருமண நிகழ்வுகள் இடம்பெற்றன.

திருமணப்பதிவுகளை தெல்லிப்பழை பிரதேச செயலக மேலதிக மாவட்டப் பதி வாளர் என்.சங்கீதா, வலிகாமம் வடக்கு விவாகப்பதிவாளர் திருமதி ந.இராஜமனோ கரன், பகுதி கிராம அலுவலர் கலியுகவரதன் ஆகியோர் மேற்கொண்டனர்.

திருமணப் பதிவு செய்யாது திருமண மாகியுள்ளவர்களுக்கான திருமணப் பதிவு களை மேற்கொள்ளும் முகமாக இத்தகைய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (202-86)

## ஓய்வூதியர்களுக்கு பாஸ் புத்தகங்கள்

யாழ்ப்பாணம்,நவ.15

சுயதொழில் ஓய்வூதியத் திட்டத்தில் இணைந்த தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்தவர்களில் 50 பேருக்கான பாஸ் புத் தகங்கள் பிரதேச செயலகத்திற்கு வந்துள் ளன.

சமூக சேவைகள் அமைச்சின் இலங்கை சமூக பாதுகாப்புச் சபையினால் வழங்கப் பட்டுள்ள பாஸ் புத்தகங்களை இத்திட் டத்தில் இணைந்துள்ளவர்களை பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவில் பெற் றுக்கொள்ளுமாறு பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசன் கேட்டுள்ளார். (202-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை பரிசளிப்பு சனியன்று

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையின் பரிசளிப்பு விழா நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் பாடசாலை அதிபர் வே.ஞானகாந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளரும் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளருமான வே.தி.செல்வரத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். திருமதி சாரதாதேவி செல்வரத்தினம் பரிசில்களை வழங்குவார். (அ-1)

## 12ஆவது பிறந்ததின வாழ்த்து



638/1, கண்டி வீதி, அரியாலையைச் சேர்ந்த சுப்பிரமணியம் - புலோரன்ஸ் தம்பதியரின் செல்வப் புதல்வி

**ஜெனட் ஷிரோமி (பபா)**

இன்று (15.11.2007) வியாழக்கிழமை தனது 12ஆவது பிறந்தநாளை மகேசன் வீதி, நவாலி வடக்கிலுள்ள தனது தற்காலிக இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார். கடைக்குட்டி பபாவை அப்பா, அம்மா, அக்காமார்களான நளினி, ரோகிணி, றொசாந்தினி, அண்ணா நளின், அண்ணி சுரேக்கா, கிசோர், டிலுக்ஷி மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் சகல செல்வங்களும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

சுப்பிரமணியம் (அப்பா), நவாலி வடக்கு.

(67944)


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

933 நீலம்

வெற்றி இலக்கங்கள்

இடபம் **01 12 48 55**

13-11-2007

செல்லுபடியாகும் தொடர் இல. 4422551 - 4437788

ஜக்பொட் பரிசு ரூபா.1,000,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 334,661 | 10/- | 3,346,610/- |
| 2 இலக்கங்கள் | 30,868 | 20/- | 617,360/- |
| 1 இல. + லக்கினம் | 30,538 | 30/- | 916,140/- |
| 2 இல. + லக்கினம் | 2,767 | 100/- | 276,700/- |
| 3 இலக்கங்கள் | 809 | 500/- | 404,500/- |
| 3 இல. + லக்கினம் | 75 | 5,000/- | 375,000/- |
| 4 இலக்கங்கள் | 4 | 100,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 1,000,000/- | - |
| மொத்தம் | | | 6,336,310/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 399,727 | | 7,359,810/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 1,747,650/-

தொடர் இல. 5312512 க்கு [illegible] டிக்கட்டுக்கள் 2007 நொவெம்பர் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். [illegible]

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| மொனராகலை | 4431178-6-43 |
| கொழும்பு | 4433877-2-77 |
| கண்டி | 4430598-5-84 |
| திருகோணமலை | 4430960-5-95 |
| கொழும்பு | 4435927-5-26 |

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

33, சேர் சைமன் [illegible] வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03


## மரண அறிவித்தல்

### வீரய்யா ஜெயரூபன் (ரூபன்)



சங்கானை கிழக்கு, பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் இல. 16, இராஜ வீதி, நல்லூர், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வீரய்யா ஜெயரூபன் 12.11.2007 திங்கட்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் வீரய்யா - ஜெயசோதி தம்பதியரின் அன்பு மகனும் துரைராஜா - நகுலேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் சேபானாவின் அன்புக் கணவரும் திலக்சனாவின் (ரூபி) பாசமிகு தந்தையும் ஜெயசீலன், ஜெயராணி, ஜெயப்பிரகாஸ் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் பகிரதனின் அன்பு மைத்துனரும் ஜெயக்குமார், சந்திரகுமார், உதயகுமார் ஆகியேரின் பாசமிகு மருமகனும் சிவராசா, காலஞ்சென்ற ராசமலர் ஆகியோரின் பெறாமகனும் காலஞ்சென்ற ராசமலர், கந்தசாமி மற்றும் சோதியம்மா (தாயத்தின்னி, மண்டைதீவு) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.11.2007) வியாழக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*இல.16, இராஜ வீதி,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.*
*(கல்வியங்காடு சந்தை அருகில்)*

தகவல்:
குடும்பத்தினர்

## தவறிவிட்டது

வேலணை தெற்கு, துறையூர் என்னும் முகவரியைச் சேர்ந்த சிவராமலிங்க ஐயர் மாதவராஜன் என்பவரது தேசிய அ. அட்டை (701081161V) இந்து குருமார் அ.அட்டை, விசேட அ. அட்டை மற்றும் தொலைபேசி புத்தகம் என்பன 12.11.2007 அன்று நீராவியடிக்கும் யாழ். போதனா வைத்திய சாலைக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் இல.02, முதலாம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.

## யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்
## கேள்விப்பத்திர அறிவித்தல்

பின்வரும் பொருள்கள் வழங்குவதற்குத் தகுதியுடைய வர்த்தகர்களிடமிருந்து கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

1. *மருந்து வகைகள்.*
2. *காகிதாதிகள்.*
3. *பிணைச்சற்பூட்டு, திறாங்கு, ஜன்னல் கொழுக்கி போன்றவை.*
4. *நீர்க்குழாய்கள், நீர்க்குழாய் இணைப்புக்கள், வால்வுகள் மற்றும் ஏனைய நீர்க்குழாய் பொருள்கள்.*
5. *ஒட்டுப் பலகைகள், கதவுகள்.*
6. *செரமிக் உபகரணங்கள்.*
7. *தீந்தைகள், வாணீஸ், பிறஸ்கள்.*
8. *மின்சாரப்பொருள்கள்.*

கேள்விப் பத்திரப்படிவங்களை, மீளளிக்காத வைப்புப் பணமாக ரூபா 1000.00 மும் மீளளிக்கத்தக்க வைப்புப் பணமாக ரூபா 5000.00 தினையும் காசாக யாழ். பல்கலைக்கழக நிதிக்கிளையில் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்து 16.11.2007 தொடக்கம் 22.11.2007 வரை யாழ். பல்கலைக்கழக நிதிப் பிரிவில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்திசெய்யப்பட்ட கேள்விப் பத்திரங்களை 29.11.2007ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு முன்னதாக நிதிக்கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அல்லது நேரடியாக சமர்ப்பிக்கவேண்டும்.

கேள்விப்பத்திர கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் UJ /F/SK/T/06/07 கட்டடப் பொருள்கள், மருந்துவகைகள், காகிதாதிகள் வழங்குவதற்கான கேள்விப் பத்திரம் என்று குறிப்பிடப்படல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் 29.11.2007 அன்று பிற்பகல் 2.30 மணிக்குத் திறக்கப்படும்.

**பதிவாளர்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**
**யாழ்ப்பாணம்.**

(சி/54366)

## போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்
## பகிரங்க ஏல விற்பனை

யாழ். போதனா வைத்தியசாலையில் 24.10.2007 அன்று நடைபெறவிருந்த பாவித்த பொருள்களுக்கான ஏல விற்பனை எதிர்வரும் 21.11.2007 அன்று மு.ப. 9.30 மணிக்கு நடைபெறும். விவரங்களுக்கு 11.10.2007 திகதி உதயன், வலம்புரி பத்திரிகைகளில் வெளிவந்த விளம்பரத்தை பார்வையிடவும்.

Dr. A.E. ஞானஜோதி,
பணிப்பாளர்,
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

## கண்ணீர் அஞ்சலி

எமது கழக உறுப்பினரும் 'இராசம்ஸ்' நிறுவன உரிமையாளருமாகிய

**தாமோதரம்பிள்ளை நவனகுமார்**

அவர்களின் மறைவைக் கேள்வியுற்று துயரடைகின்றோம். அவரின் இழப்பால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*யாழ். வணிகர் கழகம்.*

*இல. 165, மானிப்பாய் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(சி-54364)

## தவறிவிட்டது

நேற்று (14.11.2007) புதன்கிழமை ஈச்சமோட்டையில் இருந்து கொட்டடிச் சந்தைக்குச்சென்று பின் யாழ். பல்கலைக்கழகம் செல்லும் வழியில் 1½ பவுண் எடை யுள்ள சிங்கப்பூர் செயின் (பென்ரனுடன்) தவறிவிட்டது. கண் [illegible] யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். தொ.பே.2896.

## திருமண வாழ்த்து

அன்புடையீர்!

மங்களகரமான சர்வசித்து வருடம் ஐப்பசி மாதம் 29ஆம் நாள் இன்று (15.11.2007) வியாழக்கிழமை வவுனியாவில் திருமணத்தில் இணையும்

நண்பன்
**பரமோதயன்**
அவர்களையும்

திருநிறைச்செல்வி
**ஜெயராணி**
அவர்களையும்

வாழ்த்துகின்றோம்.

**வி.கேசவன்,**
**தே.செந்தூரன்,**
84, பழம் வீதி, கந்தர்மடம்.

**பரமோதயன்**
077 6681316

(67915)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி புஸ்பராணி பரமநாதன்



கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் நீர்வேலி மேற்கு, இராசவீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புஸ்பராணி பரமநாதன் 13.11.2007 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பரமநாதனின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற தியாகராசா - அன்னம்மா தம்பதியரின் இளைய மகளும் காலஞ்சென்ற கந்தையா - பொன்னம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும் பாலபூபதி (ஆஸ்திரேலியா), கனகலிங்கம் (கொழும்பு - 06), பூலோகராணி (கனடா), சண்முகராஜா (கனடா), காலஞ்சென்ற ஜீவமணி, யோகனாதன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், பரமசாமி (வவுனியா), லங்காதேவி (லண்டன்), காலஞ்சென்ற கமலாதேவி, பஞ்சலிங்கம் (கனடா), இலக்குமிதேவி (லண்டன்), இராசபாக்கியம் (ஜேர்மனி), செல்வராணி (ஜேர்மனி), காலஞ்சென்ற சியாமளாதேவி, வத்சலாதேவி (பிரான்ஸ்), நந்தினிதேவி (நீர்வேலி) ஆகியோரின் பாசமிகு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.11.2007) வியாழக்கிழமை நீர்வேலி மேற்கில் உள்ள அவரது இல்லத்தில் மு.ப. 10 மணியளவில் இடம்பெற்று, பூதவுடல் மாசிவன் இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இராசவீதி,*
*நீர்வேலி மேற்கு.*

(67937)

தகவல்:
*கா. சந்திரநாதன் (குட்டி)*

### தாமோதரம்பிள்ளை நவனகுமார் (நவனம் - R.M.S)



(இராசம் தொலைத்தொடர்பகம், இராசம் எலக்றிக்கல் - சாவகச்சேரி)

சரசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும், டச்சு வீதி, சாவகச்சேரியை வதிவிடமாகவும் உடையார் லேன், கொக்குவிலைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட தாமோதரம்பிள்ளை நவனகுமார் 13.11.2007 செவ்வாய்க்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் மதிவதனியின் (இராணி) அன்புக் கணவரும் வை. விஸ்வலிங்கம் (இளைப்பாறிய ஆசிரியர் - யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி) - காலஞ்சென்ற பொன்னம்மா (ஆசிரியர், யா/ சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை) தம்பதியரின் அன்பு மருமகனும் சனோஜா (யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), வர்ஜினி (யா/ வேம்படி மகளிர் கல்லூரி), வேணுஜன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் தா. பஞ்சாட்சரம் (தாமோதரன் அன் சன்ஸ் - சாவகச்சேரி), தா. சந்திரகுமார் (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரரும் இ. சிவனேசன் (கனடா), திருமதி சிவகங்கா, சரவணபவான், இ. சிவதாஸன், திருமதி தி. சிவ ராதிகா (கனடா), வை. சிவபாதசுந்தரம், வை. சிவகாந்தன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரரும் வி. நகுலேஸ்வரன் (நகுலந்தி பல்பொருள் வாணிபம் - மீசாலை), வி. இரவீந்திரன் (சுவீடன்), வி. வைத்தீஸ்வரன் (டென்மார்க்), வி. ஜெயச்சந்திரன் (கனடா), திருமதி ப.சர்வேஸ்வரி, திருமதி ச. சிவறூபி ஆகியோரின் அன்பு மைத்துனரும் திருமதி ந. இந்திராதேவி (யா/ மீசாலை விக்கினேஸ்வரா ம.வி.), புஸ்பலக்சுமி (டென்மார்க்) ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.11.2007) வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு மீசாலை கிழக்கு இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொற்புலவு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அல்லாரை வீதி,*
*மீசாலை கிழக்கு, மீசாலை.*

(67939)

தகவல்:
*மனைவி, பிள்ளைகள்.*

### சரவணமுத்து நடராஜா

**(ஓய்வுபெற்ற முன்னாள் அதிபர், யா/செங்குந்தா இந்துக் கல்லூரி)**

திருநெல்வேலி கிழக்கு, வாலையம்மன் கோயிலடியைச் சேர்ந்த சரவணமுத்து நடராஜா நேற்று (14.11.2007) புதன்கிழமை மன்னார், எருக்கலம்பிட்டியில் காலமானார்.

அன்னார் கமலாம்பிகையின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சற்குணசிங்கம், கமலாதேவி மற்றும் சண்முகலிங்கம் (கனடா), பாஸ்கரன் (எருக்கலம்பிட்டி), அருந்ததி (கனடா), காலஞ்சென்ற மனோகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் புவனேஸ்வரி (கனடா), சந்திரா (கனடா), குமுதினி (வைத்திய அதிகாரி, எருக்கலம்பிட்டி), டாக்டர் குணரட்ணம் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும் பிரதீப், ரஜீவ், சுசித்திரா, கீதா, தாட் சாயினி, மஞ்சுளா, மயூரன் ஆகியோரின் பேரனும் அபிமான், அஜித் தன் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எருக்கலம்பிட்டியில் 14.11.2007 புதன்கிழமை நடைபெற்று, பூதவுடல் மன்னார் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*எருக்கலம்பிட்டி,*
*மன்னார்.*
T.P.: 0602232680

(67943)

*தகவல்:*
**குடும்பத்தினர்,**
**த.பாஸ்கரன்** *(மகன்).*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெல்லிப்பழைக் கோட்டச் சுற்றுப் போட்டியில் யூனியனும் அருணோதயாவும் வெற்றி வாகை

யாழ்ப்பாணம், நவ.15

தெல்லிப்பழை கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்ற உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும், அளவெட்டி அருணோதயாக் கல்லூரியும் முறையே 16, 18 வயதுப் பிரிவுகளில் சம்பியனாகியுள்ளன.

மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இறுதிப் போட்டிகள் இடம்பெற்றன.

16 வயதுப் பிரிவில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் மோதிக் கொண்டன.

போட்டி தொடங்கிய நேரம் முதல் இரு அணிகளும் பெரும் முயற்சியுடன் கோல்கள் பெறுவதில் ஈடுபட்டன. இதன்போது யூனியன் அணியினர் அடித்த பந்தை அருணோதயாக் கல்லூரி வீரன் தலையால் இடித்தபோது, அது தவறிப் பின்புறமாக சென்று யாரும் எதிர்பாராவண்ணம் கோல் கம்பத்தினுள் புகுந்தது. இதனால் முதல் பாதி ஆட்டம் முடிவடையும்போது யூனியன் கல்லூரி ஒரு கோலை பெற்று முன்னிலையில் இருந்தது.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் பெரும் முயற்சி எடுத்த போதிலும் கோல்கள் எதனையும் இரு அணிகளும் பெற முடியாத நிலையில் ஆட்டம் முடிவுற்றது.

யூனியன் கல்லூரி 1:0 என்ற கோல் கணக்கில் அருணோதயாக் கல்லூரியை வெற்றி கொண்டு தெல்லிப்பழை கல்விக் கோட்ட சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

3ஆம் இடத்திற்கான ஆட்டத்தில் இளவாலை மெய்கண்டான் வித்தியாலயமும் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

மகாஜனக் கல்லூரி 3:0 என்ற கோல் கணக்கில் மெய்கண்டான் வித்தியாலயத்தை வெற்றிகொண்டு 3ஆம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

18 வயதுப் பிரிவு இறுதிப் போட்டியில் மகாஜனக் கல்லூரியும் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

போட்டி தொடங்கிய நேரம் முதல் மிகவும் விறுவிறுப்பாக இரு அணிகளும் விளையாடின. இந்நிலையில் அருணோதயாக் கல்லூரி வீரர் கோல் கம்பத்தை நோக்கி தூக்கி அடித்த பந்தை மகாஜனக் கோல் காப்பாளர் கோல் கம்பத்தினுள் எல்லையைக் கடந்து உள் சென்று பந்தை நெஞ்சுடன் அணைத் துப் பிடித்தார். அதைக் கோல் என நடுவர்கள் தீர்ப்பளித்தார்கள்.

இதனையடுத்து மைதானத்துக்குள் நுழைந்த ஆதரவாளர்கள் சிலர் வீரர்களைத் தொடர்ந்து விளையாட விடாமல் தடுத்ததுடன் தர்க்கத்தில் ஈடுபட்டனர். இதனையடுத்து அங்கு வந்த மகாஜனக் கல்லூரி ஆசிரியர்கள் போட்டிக்கு வந்த உதவிக் கல்விப் பணிப்பாளரிடம் சென்று தமது அணி தொடர்ந்து விளையாடவில்லையெனவும் அவர்கள் இரண்டாம் இடத்தை ஏற்றுக்கொள்வதாகவும் தெரிவித்தனர்.

இதனையடுத்து நடுவர்கள் மைதானத்தை விட்டு வெளியேறியதுடன் அங்கு இடம்பெற்ற சம்பவம் தொடர்பான அறிக்கை ஒன்றையும் கல்விப் பணிப்பாளருக்குக் கையளித்தனர். இந்தப் போட்டியில் அருணோதயாக் கல்லூரி வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டது. (50-86)



வடமராட்சி வலயப் பாடசாலை அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டியில் 16, 18 வயதுப் பிரிவுகளில் தேவரையாளி இந்துக் கல்லூரி சம்பியனாகியது. தேவரையாளி இந்துக் கல்லூரி அணி அறிமுக நிகழ்வில் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். செல்வராஜா, உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். வல்லிபுரம் ஆகியோர் கலந்துகொண்டுள்ளதைப் படத்தில் காணலாம்.

(படம்: சுந்தா)

# வேலணைக் கல்விக் கோட்டப் பாடசாலைகளின் உதைபந்தாட்ட இறுதியாட்டங்களின் முடிவுகள்

வேலணை கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்ற உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் 14 வயதுப் பிரிவில் நயினாதீவு கனிஸ்ட வித்தியாலயமும், 16 வயதுப் பிரிவில் புங் குடுதீவு மகா வித்தியாலயமும் 18 வயதுப் பிரிவில் வேலணை மத்திய கல்லூரியும் சம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

வேலணை மத்திய கல்லூரி மைதானத்தில் போட்டிகள் இடம்பெற்றன.

14 வயதுப் பிரிவினருக்கான இறுதி ஆட்டத்தில் புங்குடுதீவு சித்தி விநாயகர் வித்தியாலயமும் நயினாதீவு கனிஸ்ட வித்தியாலயமும் மோதிக்கொண்டன.

நயினாதீவு கனிஸ்ட வித்தியாலயம் 2:0 என்ற கோல் கணக்கில் புங்குடு தீவு சித்தி விநாயகர் வித்தியாலயத்தை வெற்றிகொண்டு சம்பியனாகியது.

16 வயதுப் பிரிவில் புங்குடுதீவு மகா வித்தியாலயமும் வேலணை மத்திய கல்லூரி யும் இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியிருந்தன.

இரு அணிகளும் விளையாடாமல் நாணயச் சுழற்சி மூலம் வெற்றி தீர்மானிக்கப்பட்டது. இதில் புங்குடுதீவு மகா வித்தியாலயம் வெற்றிபெற்று கோட்ட சம்பியனாகத் தெரிவானது.

3ஆம் இடத்திற்கான ஆட்டத்தில் நயினாதீவு கணேசா வித்தியாலயமும் வேலணை மேற்கு நடராசா வித்தியாலயமும் மோதிக் கொண்டன. இரு அணிகளும் கோல்க்ள் எதனையும் பெறவில்லை. வெற்றி தோல்வியைத் தீர்மானிக்க சமநிலை உடைப்பு உதைகள் வழங்கப்பட்டன. இதில் நயினாதீவு கணேசா வித்தியாலயம் 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று 3ஆம் இடத் தைப் பெற்றுக்கொண்டது.

18 வயதுப் பிரிவில் இறுதி ஆட்டத்தில் வேலணை மத்திய கல்லூரியும் புங்குடு தீவு மகா வித்தியால்யமும் மோதிக் கொண்டன.

இரு அணிகளும் தலா ஒவ்வொரு கோல்களைப் பெற்ற நிலையில் ஆட்டம் சமநிலையில் முடிவுற்றது.

வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்கு சமநிலை உடைப்பு உதைக்ள் வழங்கப்பட்டன. வேலணை மத்திய கல்லூரி 4:3 என்ற கோல் கணக்கில் புங்குடுதீவு மகா வித்தியா




லயத்தை வெற்றி கொண்டு சம்பியனாகியது.

3ஆம் இடத்திற்கான ஆட்டத்தில் புங்குடுதீவு சித்திவிநாயகர் வித்தியாலமும் நயினாதீவு ஸ்ரீ கணேசா வித்தியாலயமும் மோதிக் கொண்டன.

இரு அணிகளும் ஆட்டம் முடிவடை யும் வரை கோல்கள் எதனையும் பெறாத நிலையில் ஆட்டம்சமநிலையில் முடிவடைந்தது. வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற் காக சமநிலை உடைப்பு உதைகள் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து நயினாதீவு ஸ்ரீ கணேசா வித்தியாலயம் 4:3 என்ற கோல் கணக்கில் புங்குடு தீவு சித்திவிநாயகர் வித்தியாலயத்தை வெற்றி கொண்டு 3ஆம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. (50-86)

# குருப்பெயர்ச்சி உங்களுக்கு எப்படி...?

**(15.11.2007 முதல் 29.11.2008 வரை) - சோதிடர் கிருஷ்ணா.**

## விருச்சிகம்

விசாகம் 4, அனுசம் 1 - 4, கேட்டை1 ராசியிலிருந்த குரு பகவான் 2 இல் வருகிறார். வருமானங்கள் தடையின்றி வரும். மக்களின் படிப்பு நன்றாகும். அவர்களுக்கு புதுபடிப்பான இடங்கள் கிடைக்கும். கணவன், மனைவி உறவு நன்றாக இருக்கும். எதிரிகளை வென்று விடலாம். தகப்பனார் வழி செலவுகள் குறையும். பூர்வீக சொத்துக்கள் கிடைக்கலாம். நண்பர்கள் உதவுவார்கள். தொழிலில் முன்னேற்றம் உண்டு. சிலருக்கு வேலை வாய்ப்புக்கள் கிடைக்கும். புதிய தொழில் தொடங்க வாய்ப்பு வரும். தொழிலில் வருமானம் கூடும். ரசி நாதன் செவ்வாய் 8 இல் நீண்ட நாள் இருப்பது நல்லதல்ல. புதிய நோய்கள் வந்து குணமாகும். எதிர்பாராத செலவுகள், சண்டைகள் வந்து போகும். மன நிம்மதி கெடும்படியான சில சம்பங்கள் வரலாம். சூரிய வழிபாடு அரசு தொல்லைகளிலிருந்து பாதுகாப்பு தரும். சில மாணவர்களுக்கு விளையாட்டுகளில் பரிசுகள் கிடைக்கும். விளையாடும்போது கவனம் தேவை. வீட்டு பிராணிகளின் தொல்லை கூடும். அவைகளுக்கு நோய் வரலாம். வாகனங்கள் செலவு, வீடு பழுது பார்த்தல் போன்றவைகளால் செலவு கூடும். தொழிலாளர்கள் வேலை செய்யும் போது கவனமாக மிஷின்களை கையாள வேண்டும். பல நன்மைகள் குரு பகவான் செய்தாலும் சனி பகவான் சில எதிர் மறைவான செயல்கள் நடக்கச் செய்வார். இருவரையும் வணங்குதல் நன்மை தரும். விநாயகரையும் தினமும் எழும்பும்போது நினையுங்கள். விநாயகர் அகவல் பாராணம் செய்வது நல்லது.

அதிர்ஷ்ட திகதிகள் : 9, 18, 27,3,6,24

**பெண்களுக்கு:-** உங்களுக்கு இந்த குரு பெயர்ச்சி மிகவும் சிறப்பாக இருக்கும். குரு 2ஆம் இடத்திற்கு வந்திருப்பது உங்களுக்கு யோகமான காலமாகும். உடல் நிலையில் ஆரோக்கியம் காணப்படும். பணக் கஷ்டம், மனக்கஷ்டம் நீங்கி மிகவும் நல்லபடியாக இருப்பீர்கள். 2ஆம் இட குருவால் உங்களுக்கு குருபலவானாய் இருப்பார். தடைப்பட்டு வந்த கல்யாணம், குழந்தை பாக்கியம் போன்ற மங்களகரமான காரியங்கள் நடைபெறும். எல்லா காரியங்களிலும் தடைகள் விலகிப் போகும். ஏற்கனவே வேலையில் உள்ளவர்களுக்கும் பதவி உயர்வு, சம்பள உயர்வு கிடைக்கும். உங்களுக்கு வந்தகெட்ட பெயர்கள் எல்லாம் விலகி நல்ல பெயர் அந்தஸ்து கிடைக்கும். ஒரு சில பெண்களுக்கு குடும்பத்துடன் வெளியூர் அல்லது வெளிநாடு செல்லும் சந்தர்ப்பங்கள் வரலாம். ஒரு சிலருக்கு காதல் கல்யாணம் செய்வதற்கான சூழ்நிலைகள் வரலாம். இந்த குரு பெயர்ச்சியானது விருச்சக ராசி பெண்களுக்கு மிகவும் யோகமான நல்ல பலன்களை அளிக்கும் நேரமாகும். குரு வழிபாடு அவசியம்.

**மாணவர்களுக்கு:-** இந்த குருப் பெயர்ச்சி மாணவர்களுக்கு உற்சாகமான நேரமாகும். இதுவரை படிப்பில் மந்தமாக இருந்த நீங்கள் இந்த காலத்தில் முதல் மதிப்பெண்கள் பெற்று முதல் மாணவர்களாக விளங்குவீர்கள். மொத்தத்தில் நீங்கள் படிப்பில் முதல்வனாக விளங்குவீர்கள். படிப்பு மிகச் சிறப்பாக படிப்பதற்கான வாய்ப்புகள் அதிகம். ஆசிரியர்கள், பெற்றோர்கள், உறவினர்களிடம் இருந்து நல்ல பெயர் எடுப்பீர்கள். ஒரு சில மாணவர்களுக்கு வெளிநாட்டுக்கு சென்று தங்களது படிப்பைத் தொடர்வதற்கான வாய்ப்பு இருக்கிறது. படிப்பு முடிந்தவர்களுக்கு உடனடியாக வேலை கிடைப்பதற்கான யோகம் உண்டு. மாணவர்களுக்கு சிறப்பான காலமாகும்.

**அரசாங்க வேலை செய்வோருக்கு:-**

உங்களுக்கு இந்த குரு பெயர்ச்சி அதாவது 2ஆம் இடத்திற்கு வந்திருக்கும் குரு பகவான் மிகவும் சிறப்பான பலன்களை அள்ளித் தரப்போகிறார். உங்களுடைய பதவி உயர்வு, சம்பள உயர்வு உடனடியாக நிறைவேறும். உங்களுக்கு பேரும், புகழும், வசதி வாய்ப்பும் பெருகும். அரசாங்க காரியங்கள் உடனுக்குடன் நிறைவேறும். மனசுக்கு மகிழ்ச்சியான சம்பவங்கள் நடைபெறும். சொந்த வீடு வாங்குவதற்கான யோகம் உண்டு. அரசாங்கத்தில் இருந்து உதவிகள், சலுகைகள் கிடைக்கும். ஒரு சிலருக்கு வேலை விஷயமாக வெளிநாட்டு பிரயாணம் செய்யும் சந்தர்ப்பங்கள் வரலாம். வருமானம் பன்மடங்காக பெருகும். வேலை விஷயமாக வெளியூர் சென்றவர்கள் எல்லாம் ஒன்றாக கூடும் காலம் வரும். இந்த பெயர்ச்சி உயர்வான பெயர்ச்சியாகும்.

**சொந்தத் தொழில் செய்வோருக்கு:-**

இந்த குருப் பெயர்ச்சி மிகவும் நல்லது ஆகும். உங்கள் 2ஆம் இடத்திற்கு வந்திருக்கும் குருபகவான் அங்கிருந்து 10 ஆம் இடத்திற்கு (கர்மஸ்தானம்) பார்வையிடுவதால் இப்போது தொழில், வியாபாரங்கள் மிகவும் விசேஷமாக இருக்கும். செய்யும் தொழிலில் பெரும் இலாபம் காணலாம். வரவேண்டிய பாக்கிகள் எல்லாம் உடனுக்குடன் வந்து சேரும். சிலருக்கு புதிதாக தொழில் தொங்குவதற்கான வாய்ப்புகள் வரலாம். புதிய முயற்சிகளில் இறங்கினால் அதுவும் வெற்றி அடையும். மற்றும் சொந்த வீடு, நிலம், தோட்டம், வண்டி, வாகனம் என சொத்துக்கள் வாங்குவதற்கான நேரங்கள் கைகூடும். உங்களுக்கு நினைக்காத அளவில் திடீர் பண வரவு உண்டு. இந்த காலத்தில் பண நடமாட்டம் அதிகமாக இருக்கும். எவ்வளவு பணம் வந்தாலும் தெய்வத்தினை மறக்காமல் வழிபடுங்கள் என்றும் நிலைத்து நிற்கும்.

# ஆணவத்தையும் அதர்மத்தையும் அழித்து அருள்பொழிந்த முருகன்

முருகன் என்றால் அழகன் என்று பொருள். அந்த அழகனான முருகன் அவ்வுணர்களை அழிப்பதற்கென்றே அகிலத்தில் உதித்தவன். சிவன் கொடுத்த வரம், சூரபன்மன்னாதியோருக்கு ஆணவத்தையும், மமதையையும் ஊட்டியது. ஆனாலும் கொடுத்தவனே பறிப்பது முறைமையன்று என எண்ணித் தன்னுடைய அம்சமாகவே ஆறுமுகப் பெருமானைத் தோற்றுவித்தருளினார்.

''ஆதலின் நமது சக்தி அறுமுகன்; அவனும் யாமும் பேதகமில்லோம்'' என்று சிவன் பகர்வதாகக் கச்சியப்பர் கந்தபுராணத்தில் கூறுகிறார்.

முருகப் பெருமான் யுத்தத்துக்கு ஆயத்தமானார். ஒரு சிறுவன் அதாவது பச்சிளம் பாலகன் தனக்கெதிராகப் போர் செய்ய வருகிறான் என்பதை அறிந்த சூரபன்மன் எள்ளிநகையாடினான். ''பால் மணம் மாறாப் பாலகனோடு நன் போரிடுவதா? சீ! வெட்கம்!!'' என்று பொருமினான். யுத்த களத்தில் இருவரும் சந்தித்தனர். கருணை நிறைந்த முகத்தையுடைய கந்தப் பெருமானைக் கண் டான் சூரன்.

**இன்று சூரசங்காரத் திருவிழா**

'முண்டக மலர்ந்த தன்னமூவிரு முகங்களோடு..... தண்டையுஞ் சிலம்புமார்க்கும் சரண மும் தெரியக்கண்ட' சூரனுக்கு ஒரு கணம் மயக்கத்தை ஏற்படுத்தின. முருகனின் திருப் பெருவடிவத்தைக் கண்டவன் உள்ளம் உருகினான் கண்ணீர் சொரிந்தான். அத்தனையும் மறந்து அவன் பாதத்தைப் பணிந்து சரண்புக ஆசைப்பட்டான். 'ஆணவ மேலீட்டினால் அகங்காரம் தலையெடுக்கவே மனம்மாறிய சூரன் முருகனோடு போர் புரிந்தான். இறுதியில் அருளே உருவான ஆறுமுகன் அவனை அழிக்காமல் அவனுடலை இருகூறாக்கி சேவலும் மயிலுமாக ஆக்கிக் கொண்டான். மமதையை அடக்கி மயிலாகவும் செருக்கை அடக்கிச் சேவலாகவும் மாற்றினார் முருகன்.ஆணவமும் அகங்காரமும் மமதையும் செருக்கும் நீண்ட நாள்களுக்கு நிலைக்க மாட்டாதென்பதற்கு சூரபன்மன் வரலாறு ஓர் எடுத்துக் காட்டாகும்.

# மனிதன் எவ்வாறு தெய்வத்தை உணர்வது?

பெரியோர்களைத் துதிப்பதன் அர்த்தம் என்ன? பெரியார்களுக்கு மரியாதை செலுத்த வேண்டியது ஏன்? இதனால் கிடைக்கும்பயன் என்ன? என்ற ஆழ்ந்து விசாரணை செய்தால் இதுவும் வாழ்க்கை எனும் நாடகத்தில் ஒருபகுதியே என்பது தெளிவாகும்.

தனக்குள்ளேயே இருக்கும் ஆனந்தத்தை நாடி பிறரிடமோ அல்லது வெளிப்பொருள்களிலோ தேடுவதும் அந்தநாடகத்தில் ஒரு அங்கமே எனலாம். உன்னதமான நிலையை அடைய விரும்பினால் உன்னதமான பாதையைப் பின்பற்ற வேண்டும். உன்னதநிலையை எட்டுவது என்பது பறவைகளைப் போல் இறக்கைகளுடன் ஆகாயத்தை நோக்கிப் பறந்து செல்வதென்பதல்ல. நீங்கள் கோருவது முத்தி அல்லது விடுதலை. முத்தியடைய பெரியோர்களுடன் சேருதலும், ஜபம், தியானம் முதலிய சாதனைகள் மட்டும் போதாது. அவைகள் போலியானவையே. அதிசூட்சுமமான உண்மையான, புனிதமான, உத்தமமான, அமரத்துவமான தெய்வத்துவத்தை போலியான சாதனைகளால் அடைய முடியாது. மோட்சம் என்றால் ஏதோ பிரத் தியேகமான பிரதேசம் அல்ல. ஒரு குருவோ மற்றவரோ வழங்கக் கூடியதல்ல. ஒருவரின் உண்மையான தன்மையை, அவருக்குள்ளே இருக்கும் மெய்ப்பொருளை உணர்தலே, மோட்சம் என்பதாகும். மிருகத் தன்மையில் உழன்று கொண்டு, வெளி உலக நாட்டத்திலேயே ஈடுபட்டு அவற்றைப் பற்றிய நினைவிலும் ஆசையிலும் காலத்தைக் கழித்து வரும் மனிதன் எப்படித் தெய்வத்துவத்தை உணரமுடியும்?



**சாயி சிந்தனை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4ஆம் ஆண்டின் நினைவில்

அமரர்
**வெலிச்சோர் மைக்கல்**
*(மைக்கல் றேடியோ சேவிஸ் உரிமையாளர்)*



தோற்றம் 23*02*1935
மறைவு 15*11*2003

நாலாண்டுகள் நீங்கள் என்னைவிட்டு
மறைந்தாலும் என் நெஞ்சத்தில் உங்கள்
நினைவின் அலைகள் இன்றும் பசுமரத்தாணி
போல் பதிந்திருக்கின்றன அவை என்றென்றும்
மறையப்போவதில்லை!

*760, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.* (67907) **மனைவி.**

## 7ஆம் ஆண்டின் நினைவில்...

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 03 | 15 |
| * | * |
| 01 | 11 |
| * | * |
| 1927 | 2000 |



### அமரர் குணரத்தினம் செல்வத்துரை
(ஓய்வுபெற்ற அதிபர் மற்றும் பிரபல சித்த ஆயுள்வேத பரம்பரை வைத்தியர், சைவ வித்தியாபிவிருத்திச் சங்க உறுப்பினர்)

திதி: 28.10.2007

அன்புடனும் பாசத்துடனும்
எங்களை வளர்த்த அப்பாவே!
எங்கள் வீட்டு ஒளிவிளக்கே!
எங்கு சென்றீர் எம்மைவிட்டு
இனி என்று காண்போம்
உங்கள் திருமுகத்தை. நீங்கள் மறைந்தாலும்
உங்கள் நினைவுகள் ஒருபோதும்
எம்மை விட்டு நீங்காது
ஆயிரம் உறவுகள் வந்தாலும்
அப்பா உங்களுக்கு நிகராகுமா?
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(67930)

அமரர் செல்வத்துரை ஞாபகார்த்த வைத்தியசாலை, சுழிபுரம் மேற்கு.
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## தவறிவிட்டது

உரும்பிராய் ஞானவைரவர் கோயிலடியைச் சேர்ந்த செல்வரத்தினம் வயிரவநாதன் என்பவருடைய தே.அ.அ.இல (581133898V), விசேட அ. அட்டையும் உரும்பிராய் சந்தியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட விலாசத்தில் ஒப்படைத்து உதவவும். (சன்மானம் வழங்கப்படும்)

**யாழ்ப்பாணத்தில்**
**வாடிக்கையாளர்களின் நன்மைக்காக**
**இன்று 15.11.2007 இல் ஆரம்பம்**

## அஷ்டலக்ஷ்மி புத்தகசாலை

*271/15, கே.கே.எஸ். வீதி*
*(மைலன்ட்ஸ் கட்டடம்), யாழ்ப்பாணம்.*
(67934)

## இடமாற்ற அறிவித்தல்

**மகாசக்தி ரெக்ஸ்**

இல. 03,பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு என்னும் முகவரியில் இயங்கிய எமது மகா சக்தி ரெக்ஸ் வியாபார ஸ்தாபனம் **இல.23, லிங்கம் சில்க் ஹவுஸ் மேல்மாடிக்கு** இடம் மாற்றப்பட்டுள்ளது என்பதனை அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்களிற்கு அன்புடன் அறியத் தருகின்றோம்.

(67921) **நிர்வாகத்தினர்.**

## யாழ்ப்பாணக் கல்வி நிலையம்
## The Jaffna Education Centre
(நாதன்ஸ் சினிமாவுக்கு முன்பாக மேல்மாடியில்)

**Spoken English**
**with**
**Grammar**
**சிங்களம்**
**Shorthand Typing**
ஆகிய பாடங்கள் இரு மொழிகள்
மூலமும் கற்பிக்கப்படுகின்றன.

**புதிய பிரிவு ஆரம்பம்: 17.11.2007**

பாடமுடிவில் "சான்றிதழ்"
வழங்கப்படும்.

*நிர்வாகி* **இ.லோகநாயகி.**
(67898)

## சாவகச்சேரி மருத்துவமனையில் வீதி அமைக்க கோரிக்கை

யாழ்ப்பாணம்,நவ.15

சாவகச்சேரி மாவட்ட மருத்துவமனையின் வெளிநோயாளர் பிரிவுக்கும் விடுதிகளுக்குமிடையில் தற்காலிக வீதி ஒன்றை அமைக்குமாறு நோயாளர்கள் கேட்டுள்ளனர்.

வெளிநோயாளர் பிரிவிலிருந்து ஆண்கள் விடுதி, மகப்பேற்று விடுதி என்பவை 100 மீற்றருக்கும் அப்பால் உள்ளதாலும் அப் பகுதி மணல் தரையாக உள்ளதாலும் நோயாளர்கள் சிரமத்தின் மத்தியில் விடுதிகளுக்குச் செல்வதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

மழை வேளைகளில் வெள்ளம் தேங்கி நிற்பதால் விடுதிகளுக்கு செல்வதில் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(202-207)

யா/நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்

**அகவை அறுபதில்**

*சேவையில் நிறைவு காணும் ஆசிரியர்*

## திரு. விநாசித்தம்பி திருச்செல்வம்
**15.11.2007**



*கடந்த 9 ஆண்டுகளாக*
*எமது வித்தியாலயத்தில்*
*கணித ஆசானாக*
*நற்பணியாற்றி,*
*ஓய்வுபெறும் தங்களை*
*நன்றியோடு*
*பாராட்டுவதோடு*
*எதிர்காலத்திலும்*
*நோய் நொடியின்றி*
*வளமாக நலமாக வாழ*
*வாழ்த்தும்.*

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர் சங்கத்தினர்
யா/நல்லூர் இந்து தமிழ் பெண்கள் பாடசாலை, நல்லூர்.
*(யா/நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்).*
(67918)

## ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவர் மன்றம்
**தாய்ச்சங்கம்**

### ஆண்டுப் பொதுக்கூட்ட அறிவித்தல்

ஆண்டுப் பொதுக்கூட்டம் 18.11.2007 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

மன்றத்தில் இணைந்துள்ள உறுப்பினர்கள் தவறாது கலந்து கொள்ள அழைக்கிறோம்.

*ஹாட்லிக் கல்லூரி,*
*பருத்தித்துறை.* (சி/54355) **இணைச்செயலர்.**

## கண்ணீர் அஞ்சலி

*எமது முன்னாள் ஆசிரியர்*
**திருமதி தோத்திரமலர் சச்சிதானந்தம்** *அவர்களின் ஆருயிர்க் கணவர்*
**செல்லையா சச்சிதானந்தம்**
*அவர்கள் இயற்கையெய்திய செய்தியறிந்து மிகவும் துன்புறுகின்றோம்.*
*இழப்பைத் தாங்காது துடிக்கும் இதயங்களோடு பங்குகொள்கின்றோம்.*
*அன்னாரின் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

**அதிபர், ஆசிரியர் குழுமம்,**
*யா/யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை,*
*யா/பொன்.பரமானந்த வித்தியாலயம், குரும்பசிட்டி.*
(67925)

**இதோ!**

இளமைத் துடிப்புமிக்க முழுமையான, திருப்திகரமான பாலியல் இன்பத்தைப் பெற்று, உங்கள் உடலில் ஜீவசக்தியைப் பெருகச்செய்து, பூரிக்கச் செய்வதற்கும் விரயமாகும் உங்கள் சக்தியை விரைவில் புனரமைப்பதற்கும் நரம்புத்தளர்ச்சி, மூட்டுவலி, கடுப்பு நோவு ஆகியவற்றை நீக்கி உடலுக்கு உயிர் துடிப்பையும் வாலிபத்தின் வனப்பையும் பெறுவதற்கும் பாவியுங்கள்!

100% இளமையையும் வலிமையையும் தரும்.

**சித்தாரா முடக்கத்தான் அமுக்கரா சிரப்**

யாழ். குடாநாட்டின் அனைத்துப் பார்மசிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw.
(Reg.No:-6382) AR/PR/No:228

யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:
**சிவா நறுமணப்பூங்கா**
*இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.*

(சி/54292) (குறிப்பு:- சத்திரச்சந்திக்கு அண்மையில்)

## 12 ஆம் ஆண்டு நினைவுகள்

**ஸ்ரீமான்**
**ஷண்முகரத்னம் குமரேசன்**
(முன்னாள் விரிவுரையாளர், ஆசிரிய பயிற்சிக்கலாசாலை, கோப்பாய்)



தோற்றம் 10*06*1929
மறைவு 29*10*1995

திதி: கந்தஷஷ்டி

*மென்மையுறு உணர்வுகளால் மேன்மையுறு பணி புரிந்து*
*இன்னுயிர் நீத்துச் சென்ற ஈராறு வற்சரத்தில்*
*புன்னகை எழில் வதனம் புரிந்திட்ட அன்பு பாசம்*
*இன்னறும் நினைவுமீள ஏற்றமாய் வந்திக்கின்றோம்.*

ஓம் சாந்தி!

*மணியகாரன் ஒழுங்கை,*
*கொக்குவில்.* **மனைவி, பிள்ளைகள்.**
(67529)

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 27 | 15 |
| . | . |
| 05 | 11 |
| . | . |
| 1933 | 2004 |



## அமரர் அந்தோனிப்பிள்ளை இராயப்பு

எம் இல்லத்தின் ஒளிவிளக்கே! நீங்கள்
எம்மை விட்டுப்பிரிந்து மூன்று ஆண்டுகள் ஆனதோ
எம்மையெல்லாம் அன்புடன் அரவணைத்து
அறிவுடன் நற்பண்புகள் ஊட்டி
நல்நண்பனாய், தந்தையாய் அன்புக்கும்
பண்புக்கும் இலக்கணமாய் திகழ்ந்தீர்கள்
பாரினில் உமைப்பிரிந்து நாம் தனியாய்த் தவிக்கின்றோம்
ஆண்டுகள் பல சென்றாலும் மாறாது எம் துயர்!

இவரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக இன்று (15.11.2007) வியாழக்கிழமை கொழும்பு, புதுச்செட்டித் தெரு வியாகுல அன்னை ஆலயத்திலும் யாழ்ப்பாணம் அருள் ஆச்சிரமத்திலும் இரங்கல் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும்.

இவரின் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.

*தவசிக்குளம், மிருசுவில்.* (67876)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# ஜே.வி.பி. முன்னின்று இயக்கும் ஆட்சிக் கவிழ்ப்பு நாடகம்

நிதிச் சட்டமூலமான வரவு - செலவுத்திட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும்போது, அரசைக் கவிழ்க்கும் வாய்ப்பு இரண்டு தடைவைகளில் கிட்டும். ஒன்று - அந்தத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பின் மீதான வாக்கெடுப்பின்போது. மற்றது - இறுதியாக மூன்றாம் வாசிப்பின் மீதான வாக்கெடுப்புச் சமயத்தில்.

தற்போது நாடாளுமன்றப் பெரும்பான்மைக்காக அல்லாடிக் கொண்டிருக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசு, இந்தக் கண்டங்களை எதிர்வரும் திங்கட்கிழமையும் (19 ஆம் திகதியும்) அடுத்த மாதம் 14 ஆம் திகதியும் எதிர்கொள்ளவிருக்கின்றது.

இந்த வரவு - செலவுத்திட்டத்தை முற்றும் முழுதாக 'யுத்த பட்ஜெட்' என்று விமர்சித்திருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அதனை முழு அளவில் எதிர்ப்பதற்குத் தீர்மானித்திருக்கின்றது. எனினும், அதன் முழு நாடாளுமன்ற உறுப்பினர்களும் - 22 பேரும் - இந்த அரசு முதலாவது கண்டத்தை எதிர்வரும் திங்கட்கிழமை நாடாளுமன்றில் சந்திக்கும்போது சபையில் இருந்து அரசை எதிர்ப்பார்களா என்பது தெளிவாகத் தெரியவில்லை. வெளிநாடு சென்றிருக்கும் ஓரிரு எம்.பிக்கள் இன்னும் நாடு திரும்பவில்லை. ஆகவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்தவரை இந்த வரவு - செலவுத்திட்டத்தை முற்றாக எதிர்ப்பது என, அது கொள்கையளவில் தீர்மானித்து அதில் உறுதியாக இருந்தாலும், நடைமுறையில் அது டிசம்பர் 14 ஆம் திகதி - மூன்றாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பின்போதுதான் - சாத்தியமாகும் என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

ஆனால் அடுத்த பிரதான எதிர்க்கட்சியான ஜே.வி.பி. பலரும் எதிர்பார்க்காத விதத்தில் அரசுக்கு ஆறே ஆறு நாள்கள் காலக்கெடு கொடுத்து, அரசுத் தலைமைக்கு பேதி மாத்திரை வழங்கியிருக்கின்றது.

நேற்றுமுன்தினம் இரவு, அக்கட்சியின் ஸ்தாபகர் அமரர் றோஹண விஜேவீரவின் 18 ஆவது சிரார்த்த தினத்தில் உரையாற்றிய அக்கட்சியின் தற்போதைய தலைவர் சோமவன்ஸ அமரசிங்க, நான்கு விடயங்களை அரசு நிறைவு செய்வதற்கு ஆறு நாள்கள் காலக்கெடு விதித்திருக்கிறார். எதிர்வரும் திங்கட்கிழமையன்று நாடாளுமன்றம் கூடும்போது வரவு - செலவுத்திட்டத்தை ஒட்டிய முதலாவது கண்டத்தை அரசு சந்திக்கும் சூழலில் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கின்றது.

** விடுதலைப் புலிகளுடன் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை முற்றாக அரசு முறித்து விட வேண்டும்.*

** இனப்பிரச்சினைக்குத் தென்னிலங்கையின் தீர்வு யோசனையை சமர்ப்பிப்பதற்காக உருவாக்கப்பட்ட அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவைக் கலைத்து விடவேண்டும்.*

** ஐ.நா. பிரதிநிதிகளின் இலங்கை விஜயங்களுக்கு அனுமதிக்கக்கூடாது.*

** நாட்டின் தேசியப் பாதுகாப்பையும் இறைமையையும் உறுதி செய்யக் காத்திரமான நடவடிக்கைகளை அரசு எடுக்கவேண்டும்.*

- இவற்றைச் செய்யவே ஆறுநாள் காலக்கெடு மஹிந்த அரசுக்கு ஜே.வி.பியினால் விதிக்கப்பட்டிருக்கின்றது.

இதேவேளை, வரவு - செலவுத்திட்டத்தின் மூலம் நாட்டு மக்களின் வயிற்றில் அரசு அடித்துவிட்டது எனக் குற்றம் சுமத்தியுள்ள அக்கட்சியின் மூத்த நாடாளுமன்ற உறுப்பினர் லால்காந்த, அரச ஊழியர்களுக்கு மூவாயிரம் ரூபா சம்பள உயர்வு கோரிப் பெரும் வேலை நிறுத்தப் போராட்டத்துக்கு முஸ்தீபுகள் செய்யப்படுகின்றன என்றும் எச்சரித்திருக்கிறார்.

ஆக, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராகக் கச்சை வரிந்து கட்டிக்கொண்டு களத்தில் இறங்கப் போவதாக ஜே.வி.பி. கோடி காட்டி வருகின்றது.

ஆனால், தற்போதைய அரசைக் கவிழ்த்து, புதிய பொதுத் தேர்தலைச் சந்திக்கவோ அல்லது ஐ.தே.கட்சியின் பங்குபற்றுதலுடனான மாற்று அரசு ஒன்றை அமைக்க இடமளிக்கவோ அக்கட்சி தயாரா, அதற்கு அக்கட்சிக்குத் துணிச்சல் உண்டா என்பவை இன்றைய கேள்விகளாகும்.

இன்றைய நிலையில் பொதுத் தேர்தல் ஒன்றைத் தனித்துச் சந்தித்தால் இப்போது இருப்பது போன்ற நாடாளுமன்றப் பலமோ அல்லது ஆட்சியில் இருக்கும் அரசை ஆட்டுவிக்கும் வலுவோ தனது கட்சிக்குக் கிடைக்கவே கிடைக்காது என்பது ஜே.வி.பிக்கு நன்கு தெரியும்.

அதேசமயம், இந்த அரசைக் கவிழ்க்கப்போவது போல உருக்கொண்டு ஆடுவதன் மூலம் சிலவற்றைச் சாதிக்கலாம் - நன்மைகளைப் பெறலாம் - என்று கருதி, அந்த வழியில் நாடகம் ஆடுகின்றதோ அக்கட்சி என்றே எண்ணத் தோன்றுகின்றது. இந்த ஆட்சிக் கவிழ்ப்பு அச்சுறுத்தல் நாடகம் மூலம் அதிகாரத்தில் உள்ளவர்களைத் தங்களுக்கு சாதகமாகச் செயற்படுவதற்கு படியவைக்கலாம். அதேவேளை தமது ஆட்சிக்கவிழ்ப்புத் தந்திரத்தை நம்பி - இந்த அரசு கவிழப் போகின்றது என எண்ணி - ஏற்கனவே அரசுக்குள் 'மதில்மேல் பூனையாக' இருந்தவர்கள் அரசுக்கு எதிராகப் பாய்ந்தால், அரசுத் தலைமை தனது ஆட்சியைத் தக்கவைக்க மேலும் மேலும் ஜே.வி.பியில் தங்கியிருக்கும் வாய்ப்பான நிலை வரும் என்றெல்லாம் ஜே.வி.பி. கருதுகின்றதுபோலும். அதுபோலவே, ஏற்கனவே ஐ.தே.கட்சியிலிருந்து ஆளும் தரப்புப் பக்கம் பாய்ந்த ஐ.தே.க. அதிருப்தியாளர்கள் குறித்து ஜே.வி.பி. காழ்ப்புணர்வும் எரிச்சலும் கொண்டிருக்கிறது. அவர்களை அரசில் சேர்த்தமைக்காக அரசுத் தலைமையை அது சாடியும் வருகிறது. தமது ஆட்சிக் கவிழ்ப்பு எச்சரிக்கை நாடகத்தை உண்மை என நம்பி, இந்த ஐ.தே.க. அதிருப்திக்குழு எம்.பிக்கள் மீண்டும் ஐ.தே.க. பக்கம் பாயும் வாய்ப்பும் உள்ளது. அப்படி நடந்தால் தமது விருப்பை அதுவும் நிறைவு செய்யும் செயலாகவும் ஆகிவிடும்.

இப்படி 'ஒரு கல்லில் பல மாங்காய்கள்' என்ற திட்டத்துடன்தான் ஆட்சிக் கவிழ்ப்பு எச்சரிக்கை நாடகத்தை ஜே.வி.பி. அரங்கேற்றுகின்றது போலத் தோற்றுகின்றது.

எது, எப்படியென்றாலும் அடுத்த ஐந்து நாள்களுக்குள் முடிவு இதுதான் என்று தெரிந்துவிடும்தானே. அதுவரை பொறுத்திருப்போமே.....!

# புனர்வாழ்வு ஏற்பாடுகளுக்கான அறிகுறி தென்படவில்லை; இடவசதியின்மையால் சிரமம்

## *மனித உரிமைக்குழு அதிகாரியிடம் சரண் அடைந்தோர் கவலை தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், நவ.15

நாம் தங்கவைக்கப்பட்டுள்ள சிறைச்சாலையில் போதிய இடவசதி இன்மையால் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றோம். உரிய புனர்வாழ்வு ஏற்பாடுகள் செய்யப்படவில்லை. இதுவரையும் அதற்கான அறிகுறி எதுவும் தென்படவில்லை. எமது குடும்பங்கள் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றன.

இவ்வாறு கவலை தெரிவித்திருக்கின்றனர் உயிருக்கு அஞ்சி மனித உரிமை ஆணைக்குழுவில் சரண் அடைந்து யாழ். சிறைச்சாலையில் தங்கவைக்கப்பட்டுள்ளவர்கள்.

யாழ். மனித உரிமை ஆணைக்குழுவின் இணைப்பாளர் எஸ்.சிவராஜசிங்கம் தலைமையிலான அதிகாரிகள் குழு நேற்று சரண் அடைந்தோரைச் சந்தித்து அவர்களின் குறைபாடுகளைக் கேட்டறிந்தது. அப்போதே அவர்கள் மேற்கூறிய தமது கஷ்டங்களை எடுத்துரைத்தனர்.

சரணடைந்த 165 பேர் யாழ். சிறைச்சாலையில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் தம்மை விரைவில் சந்திக்குமாறு மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதனையடுத்து நேற்றுக்காலை யாழ்.சிறைச்சாலைக்குச் சென்ற மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலக இணைப்பதிகாரி எஸ்.சிவராஜசிங்கம் தலைமையிலான குழுவினர் அவர்களைச் சந்தித்து உரையாடினர்.

சரண் அடைந்தோர் தெரிவித்த குறைபாடுகள் குறித்து உரியவர்களுடன் தொடர்பு கொண்டு அவற்றை நீக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக மனித உரிமை ஆணைக்குழு இணைப்பதிகாரி அவர்களிடம் உறுதியளித்தார்.

அத்துடன் அங்கு தங்கவைக்கப்பட்டுள்ள ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கு விண்ணப்பித்த மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தேவையான ஏற்பாடுகளைக் கல்விப் பணிப்பாளருடன் தொடர்பு கொண்டு மேற்கொள்வதாகவும் அவர் உறுதியளித்தார். (அ-50)

# மாலு சந்தியில் இளைஞன் சுட்டுக் கொலை

யாழ்ப்பாணம், நவ.15

வடமராட்சி மாலு சந்திப் பகுதியில் உள்ள பருத்தித்துறை நீதிமன்றத்துக்கு அருகில் காலை 8 மணியளவில் குடும்பஸ்தர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அல்வாய் வடக்கு முத்துமாரி அம்மன் ஆலய வீதியைச் சேர்ந்த இரத்தினம் குருபரன் (வயது-27) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

சம்பவ இடத்திற்குச் சென்ற பருத்தித்துறை மாவட்ட நீதிவான் க.அரியநாயகம் மரண விசாரணைகளை நடத்தினார். (203-155)

# ஜி.சீ.ஈ. உயர்தர செய்முறை பரீட்சைகள் நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம்,நவ.15

கடந்த ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் மனைப் பொருளியல், சங்கீதம், நடனம் ஆகிய பாடங்களுக்குத் தோற்றியவர்களுக்கான செய்முறைப் பரீட்சைகள் நாளை ஆரம்பமாகவுள்ளன.

செய்முறைப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகளை இன்று தத்தமது வலயக் கல்விப் பணிமனைகளில் பெற்றுக்கொள்ளுமாறு அதிபர்களை யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். தனியார் பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-1)

# குடும்பஸ்தர்கள் இருவரும் சகோதரர்கள் இருவரும் சரண்

யாழ்ப்பாணம்,நவ.15

உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்து சகோதரர்கள் உட்பட நால்வர் மனிதஉரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.அலுவலகத்தில் நேற்று சரணடைந்துள்ளனர்.

றக்கா வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 59 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தை ஒருவரும் - உடுப்பிட்டி அகதிமுகாமில் வசித்து வரும் 47 வயதுடைய 4 பிள்ளைகளின் தந்தை ஒருவரும் -

கோயிலாக்கண்டி, கைதடியைச் சேர்ந்த 22, 24வயதுகளை உடைய சகோதரர்கள் இருவருமே நேற்று சரணடைந்தனர். (அ-50)

# படுகொலை, காணாமற்போதல்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பான விவரங்களைத் திரட்டுவதற்காக பிரிட்டிஷ் செய்தியாளர்கள் இங்கு பயணம் செய்து கண்டறிய முயன்றனர்.

இந்த நிகழ்ச்சியின் ஓர் அங்கமாக செய்தியாளர்கள் இலங்கை இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சரத் பொன்சேகாவை செவ்வி கண்டனர்.

அட்டூழியங்கள் குறித்துக் கேட்கப்பட்டபோது, *"அவை இராணுவ நடவடிக்கைகளை எதிர்க்கும் 'தனிப்பட்ட வேறு நலன்களில் அக்கறையுள்ள தரப்புகளின், ஆதாரமற்ற குற்றச்சாட்டு"* என அவர் முதலில் தெரிவித்தாராயினும், பின்னர் அவை *"பயங்கரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகளின் பகுதியே"* என்பதை அவர் ஒப்புக்கொண்டார்.

தலைநகர் கொழும்பு உட்பட பல இடங்களிலும் இவ்வளவு எண்ணிக்கையான மக்கள் மர்மமான முறையில் இப்படி படுகொலை செய்யப்படுவதும் அல்லது காணாமற் போவதும் எங்ஙனம் என்று அவரிடம் கேட்டபோது *"அவை இராணுவ நடவடிக்கைகளைத் தடுப்பதற்கு அல்லது அவற்றைக் குழப்புவதற்கு முயலும் - வேறு நலனில் அக்கறை கொண்ட - தரப்புகளின் குற்றச்சாட்டு"* - என்று பதிலளித்தார் அவர்.

*"அவர்களுக்கு வேறு நலன்களில் தான் கவனம். பல நூற்றுக்கணக்கானோர் காணாமல் போய்விட்டனர் என்றும், பல நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் அவர்கள் கூறுகின்றார்கள். ஆனால் முறைப்பாடுகளைப் பொறுத்தவரை பொலிஸ் நிலையங்களிலோ அல்லது அது போன்ற வேறு தரப்புகளிடமோ உத்தியோகபூர்வ முறைப்பாடுகள் ஏதும் இல்லை. பொலிஸ் நிலையங்களுக்கு வந்து சாட்சியமளிக்க கண்கண்ட சாட்சிகளும் இல்லை."* - என்றார் அவர்.

*"எங்களைப் பொறுத்தவரை சிவிலியன்களுக்கும் அப்பாவி மக்களுக்கும் நாம் பாதுகாப்புக் கொடுக்கிறோம்."* - என்றும் அவர் குறிப்பிட்டார்.

கிழக்கு அகதிகள் கொல்லப்படுவது மற்றும் கடத்தப்படுவது குறித்துக் கேட்டபோது, *"கருணா குழுவினர் அல்லது வேறு துணைப் படையினர் இதைச் செய்கின்றார்கள் என நீங்கள் கூறுவீர்களாயின், அது புலிகளுக்கும் அந்தந்தத் துணைப்படைக் குழுக் களுக்கும் இடைப்பட்ட பிரச்சினை"* - என்று முதலில் பதில் தந்தார் ஜெனரல்.

பின்னர் *"இந்தப் பிரதேசம் (கிழக்கு) சாதாரண பிரதேசமல்ல. பயங்கரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகள் தொடரும்வரை மக்கள் கொல்லப்படுவதும் சிலர் காணாமற் போவதும் தொடரும்"* - என்ற பதிலையும் சேர்த்துக்கொண்டார் அவர்.

**மனோ கணேசனும் செவ்வி**

சட்டவிரோதக் கொலைகள், காணாமற் போகச் செய்தல் போன்றவை தொடர்பான மக்கள் கண்காணிப்புக் குழுவின் அமைப்பாளரும் மேலக மக்கள் முன்னணியின் தலைவருமான மனோ கணேசனும் 'சனல் - 4' சேவையினரால் செவ்வி காணப்பட்டார்.

கொழும்பு முழுவதும் சோதனைச் சாவடிகள் தென்பட்டாலும், ஆள்கடத்தல்களுக்குக் காரணமான எவரும் வழிமறிக்கப்படக் கூடவில்லை என்பதைச் சுட்டிக்காட்டிய அவர் *"ஆள் கடத்தல்காரர்களுக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் இடையில் கூட்டிணைப்புச் செயற்பாடு உள்ளது என்பதைப் புரிந்துகொள்வதற்கு நீங்கள் ரொக்கட்விடும் விஞ்ஞானியாக இருக்க வேண்டியதில்லை."* - என்றார்.

*"அரசுக்குள் செல்வாக்குள்ள ஆள்களை"* இந்தப் படுகொலைகளுக்குக் குற்றம் சாட்டும் மனோ கணேசன், *"தமிழர்களின் கிளர்ச்சியை அடக்கி ஒடுக்க இதுவே வழி எனகின்றனர் அவர்கள்"* என்றும் குறிப்பிட்டார்.

**புலிகளை இராணுவ ரீதியில் தோற்கடிக்க முடியும்**

இதேசமயம், புலிகளை இராணுவ ரீதியில் தோற்கடிக்க முடியும் என உறுதியாகக் கூறுகின்றார் லெப்டினன்ட் ஜெனரல் பொன்சேகா.

*"இராணுவ ரீதியில் தீர்வு ஒன்றைத் தங்களுக்குப் பெற்றுக் கொள்ள முடியாது என்பதைப் பயங்கரவாதிகளுக்குப் புரியவைக்கத் தாம் விரும்புகின்றார் என்று ஜனாதிபதி கூறியிருக்கிறார்."* - என்றும் ஜெனரல் கூறினார்.

*"எங்களை இராணுவ ரீதியில் வெல்ல முடியாது என்பதையும் இராணுவ ரீதியில் எட்டுவதற்கு அவர்கள் எதிர்பார்ப்பதை எப்போதுமே அவர்களிடம் பெற்றுக்கொள்ளவே முடியாது என்பதையும் அவர்களுக்குப் புரிய வைக்க நாம் விரும்புகின்றோம். இராணுவ ரீதியில் அவர்களை வெற்றி கொள்ளும் வலிமை எங்களுக்கு உண்டு. கிழக்கு மாகாணத்தில் நாம் அதனைச் செய்து காட்டியுள்ளோம்.*

*"ஆனாலும் இன்னும் அவர்கள் அதைப் புரிந்துகொள்ளவில்லை. அதை அவர்கள் உணர்ந்து கொள்வதற்கு இன்னும் ஒரு தடவை நாங்கள் அதைச் செய்துகாட்ட வேண்டியுள்ளது என நாம் நம்புகின்றோம்."* - என்றார் அவர்.

செய்தியாளர்கள் கிழக்குக்குச் சென்ற சமயம், அவர்கள் உள்ளூர் மக்களைப் பேட்டி காண முயன்றபோது கருணா குழுத் துணைப்படையினரால் அவர்கள் மறிக்கப்பட்டனர். பேட்டி வழங்குவதற்கு முயலும் பொதுமக்களுக்கு பேராபத்தை அவர்கள் ஏற்படுத்துகின்றனர் என அந்தச் செய்தியாளர்கள் எச்சரிக்கப்பட்டனர். கருணா குழுவினால் தாங்கள் கடத்தப்படுவார்கள் என்று தாம் அஞ்சுகின்றனர் எனவும் அந்தப் பொதுமக்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தனர். கருணா குழுவினர் இராணுவத்தினருடன் இணைந்து பணியாற்றுகின்றனர் என்று எல்லோரும் எங்களிடம் தெரிவித்தனர் - எனச் செய்தியாளர்கள் குறிப்பிட்டனர்.

சிவிலியன்களை மத்தியில் உள்ள புலிகளின் ஆதரவாளர்கள், அனுதாபிகள் என்று சந்தேகிக்கப்படுவோரை அடையாளம் காண்பதற்கு முன் எப்போதையும் விட இப்போதுதான் கருணா குழு துணைப்படையினரின் உதவி அரசுக்குத் தேவைப்படுகின்றது என்று தமிழ் அரசியல்வாதி ஆர். துரைரட்ணசிங்கம் செய்தியாளர்களிடம் கூறினார்.

பிரிட்டிஷ் செய்தியாளர்கள் யாழ். குடாநாட்டுக்கு நான்கு நாள்கள் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டனர். ஆனால் வடக்கு நகரை அடைந்த பின்னர் இராணுவத்தின் பார்வையிலிருந்து அவர்கள் விலகிச் செல்ல முடியாது என அவர்களுக்குக் கூறப்பட்டது. அத்தோடு அடுத்தநாள் அவர்கள் அங்கிருந்து புறப்படுகிறார்கள் என்று தெரிவிக்கப்பட்டதோடு 90 நிமிட நேர வழிகாட்டுதல் சுற்றுலாவும் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

அங்கு அவர்கள் இருந்த சமயத்தில் நால்வர் காணாமற்போயினர் என்றும் செய்தியாளர்கள் குறிப்பிட்டனர்.

- இப்படி இணையத்தளச் செய்திகள் தெரிவித்தன. (சி)

## நாளை

| | |
|---|---|
| ஐப்பசி - 30 | வெள்ளிக்கிழமை 16.11.2007 |
| திதி : சஷ்டி | பி.ப 12.08 |
| நட்சத்திரம் : | உத்தராடம் |
| | மு.பகல் : 09.42 |
| சுபநேரம் | : 06.07 - 07.37 |
| ராகுகாலம் | : 10.37 - 12.07 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.மாவட்ட நிலைமைகளை ஆராய சமாதானப் பேரவை குழு வருகை

யாழ்ப்பாணம், நவ.15

குடாநாட்டின் சமகால நிலைமை குறித்து ஆராய்வதற்காக தேசிய சமாதானப் பேரவையின் பணிப்பாளர் ஜெகான் பெரேரா தலைமையிலான குழு ஒன்று நேற்று யாழ்ப்பாணம் வந்துள்ளது.

தற்போதைய கள நிலைமைகள் தொடர்பாக பல தரப்பினருடனும் கலந்துரையாடிய குழுவினர் நேற்று யாழ். ஆயர் இல்லத்துக்கும் விஜயம் செய்தனர்.

அங்கு சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழுவின் பிரதிநிதிகளை அவர்கள் சந்தித் தனர்.

மக்கள் குழுவின் தலைவர் வாழ் நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, யாழ். ஆயரின் செயலாளர் வண. எஸ்.ஏ. றொசான் அடிகள், அங்கிலிக்கன் திருச்சபை யாழ். முதல்வர் வண.பி.நேசகுமார், மெதடிஸ்த திருச்சபை வண. எஸ்.கதிர்காமர், விரிவுரையாளர் சறோஜா சிவச்சந்திரன் ஆகியோர் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

குடாநாட்டில் கொலைகள், கடத்தல்கள், காணாமற்போதல் போன்ற மனித உரிமை மீறல் சம்பவங்கள் நாளாந்தம் அதிகரித்துச் செல்கின்றன என்று குழுவினர் எடுத்துக் கூறினர்.

வாகன அணி காரணமாக அடிக்கடி வீதித் தடைகள் ஏற்படுத்தப்படுவதால் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர் என்றும் எடுத் துக்கூறப்பட்டது.

அடுத்தமாதம் 12ஆம், 13ஆம் திகதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சர்வதேச சர்வமதத் தலைவர்கள் மாநாட்டின் மூலம் சமாதானத்துக்கான முயற்சிகளை முன்னெடுப்பது தொடர்பாக சமாதானப் பேரவையின் பணிப்பாளர் ஜெகான் பேரேரா பிரஸ்தாபித்தார்.

அந்த மாநாட்டில் யாழ்ப்பாணத்தில் இருந்தும் பிரதிநிதிகள் கலந்து கொள்ள வேண்டும் என்று கோரிக்கையையும் முன் வைத்தார்.

## வைகோ,நெடுமாறன் மனு இன்று விசாரணைக்கு

சென்னை,நவ.15

விடுதலைப் புலிகளின் முன்னாள் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனின் மறைவுக்கு அஞ்சலிசெலுத்தும் வகையில் கடந்த திங்கட்கிழமை பேரணி நடத்த முற்பட்டபோது கைதுசெய்யப் பட்டவர்களின் பிணை மனுத் தொடர்பான விசாரணை இன்று நடைபெற வுள்ளது.

வைகோ,பழநெடுமாறன் உட்பட 362 பேர் கைதுசெய்யப்பட்டிருந்தனர். இவர்கள் பிணை கோரி மனு சமர்ப்பித்திருந்தனர். இந்த மனு மீதான விசாரணை சென்னை முதன்மை நீதிமன்றத்தில் இடம்பெறவுள்ளது.

## விஜயதாச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றம் நேற்றுக் காலை 9.30 மணிக்கு சபாநாயகர் டபிள்யூ. ஜே.எம். லொக்குபண்டாவின் தலைமையின் கீழ் கூடியது. பிரதான நடவடிக்கைகளான மனுத் தாக்கல் மற்றும் கேள்வி - பதில் ஆகியவை முடிந்ததும் ''இன்று நான் அரசில் இருந்து எதிர்த்தரப்பு வரிசைக்கு மாறுகிறேன்'' என்று சபாநாயகரிடம் கூறிவிட்டு விஜயதாஸ எதிர்த்தரப்பு முன் வரிசை ஆசனத்தில் போய் அமர்ந்தார். (சி)

(அ-1)

## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த ராடார் அமெரிக்க அரசை இந்திய எல்லைக்குள் காலூன்ற வைக்கின்றது.

இந்தியாவின் இந்தக் கரிசனை தொடர்பாக இலங்கை சென்ற நிதி அமைச்சர் ப.சிதம்பரம் இலங்கை அரசுக்கு எடுத்துக் கூறியதாகவும் அறியவருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் கருணாநிதியும் இது தொடர்பாக மத்திய அரசிற்கு எடுத்துக்கூறியிருப்பதாக நம்பப்படுகிறது.

தமிழ்ச்செல்வனின் நடமாட்டம் அவதானிக்கப்பட்டது

விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனின் நடமாட்டம் வவுனியாவில் உள்ள ராடார் நிலையத்தின்மூலமே அவதானிக்கப் பட்டு இலங்கை வான்படையினரால் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் நம்பப் படு கிறது.

சு.ப.தமிழ்ச்செல்வனின் மறைவைத் தொடர்ந்து பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ விடுதலைப் புலிகளின் தலைவர்கள் ஒவ்வொருவரும் இவ்வாறு இலக்குவைக்கப்படுவார்கள் எனவும் தமிழ்நாட்டில் அதற்கான படைக்கல வளங்கள் இருப்பதாகவும் கூறியிருந்ததையும் இங்கு உற்றுநோக்கவேண்டும்

- என்று அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-1)

## பட்ஜெட்டுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைமுறை சாத்தியமற்ற புதிய நிபந்தனைகளை விதிப்பது ஏற்புடையதல்ல என்றும் அரசுத் தலைமை ஜே.வி.பிக்கு அறிவித்துள்ளதாகவும் அரசியல் வட்டாரங்களில் பேசப்பட்டது. ஜே.வி.பி. அரசுக்கு ஆதரவு.தராவிட்டால் நாடாளுமன்றத்தைக் கலைத்து விடப் போவதாக அரசுத் தலைமை எச்சரித்துள்ளதாகவும் கூறப்பட்டது. (அ-1)

## கஸ்தூரியார்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரஸ்தாப இளைஞனிடம் இருந்த அடையாள அட்டையில் ந.மயூரன், மல்லாகம் என விலாசம் காணப்படுவதாக பொலிஸார் நீதிவானிடம் தெரிவித்தனர்.

பிரஸ்தாப இளைஞனின் சடலத்தை யாழ்.ஆஸ்பத்திரிக்கு அனுப்பும்படியும்இளைஞன் தொடர்பான விவரங்களை பத்திரிகை மூலம் விளம்பரப்படுத்தி உறவினர்களுக்குத் தகவல் கொடுக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டார். (அ-1)

## இராணுவ முகாம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிவிலியன்கள் மீது தாக்குதல்களை நடத்த ஆரம்பித்துள்ளனர்.

எதிர்வரும் 27ஆம் திகதிக்கு முன் மன்னார் மாவட்டத்தில் இராணுவ முகாம்களுக்கு அருகில் வாழ்பவர்களை இடம்பெயருமபடி துண்டுப் பிரசுரங்களை அவர்கள் விநியோகித்துள்ளனர்.

ஆனால் பொது மக்கள் புலிகளின் கோரிக்கையை நிராகரித்து விட்டனர். தொடர்ந்தும் தமது சொந்த இடங்களிலேயே அவர்கள் வாழ்கின்றனர். அவர்களுக் கான சகல பாதுகாப்புகளையும் அரச படைகள் உறுதிப்படுத்தி உள்ளன - என்றும் அமைச்சர் கூறினார். (சி)

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெடிகளைத் தீர்த்தனர். இச்சம்பவம் இப்பிரதேச மக்கள் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது' - என்ற ஒரு செய்தி காட்டுத்தீ போன்று பரவியுள்ளது. இதைப்பற்றி என்ன கூறுகின்றீர்கள்? என அமைச்சரிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

இச்செய்தி ஆதாரமற்றது. இப்படியான எந்த ஒரு சம்பவமும் இடம் பெறவில்லை. அநுராதபுர விமானப் படைத்தளத்துடன் தொடர்புகொண்டு விசாரித்தபின் இச் செய்தி விசமத்தனமானது என்று தெரிய வந்துள்ளது.

ஊடகங்கள் மிகவும் பொறுப்புணர்வுடன் நடந்து கொள்ளவேண்டும். அண்மையில் உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை அவை மனதில் கொள்ள வேண்டும். - என்றார். (சி)

## இலங்கையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆடைகளை அப்புறப்படுத்தி, நிர்வாணமாக்கிய கொடூரத்தை இலங்கை இராணுவம் செய்ததைக் கண்ட தமிழ் நெஞ்சங்கள் பதறின.

சில நாள்களுக்கு முன்பு அதிகாலை வேளையில் வான் வழித் தாக்குதல் நடத்தி தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளரான தமிழ்ச்செல்வனையும் உடனிருந்த தளபதிகள் ஐந்து பேரையும் 'சமாதானப் பகுதியில்' படுகொலை செய்திருக்கிறது இலங்கை இராணுவம்.

தமிழ்செல்வனின் உயிரிழப்பை அமைதியின் மீது விழுந்த இடியாக அறிவித்திருக்கிறது புலிகள் இயக்கம். இதனைத் தொடர்ந்து இரு தரப்பிலும் போர் வலுப்பதற்கான வாய்ப்புகள் அதிகம் தென்படுகின்றன.

சமரச முயற்சிகள் எல்லாம் தோல்வியடைந்து போர்நீடித்தால் அதிகம் பாதிக்கப்படப்போவது, ஏற்கனவே பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் இலங்கைத் தமிழர்கள்தான். சிக்கல் முற்றினால் அவர்கள் அகதிகளாக புகலிடம் தேடி வரப்போவதும் நம்மிடம்தான்.

இந்திய அரசு இக்கட்டான இந்த நிலையிலாவது அங்கே சமாதானம் உருவாகச் சில நிர்ப்பந்தங்களை உருவாக்க வேண்டும். தமிழக முதல்வர் இரங்கல் தெரிவித்தைக் கூட உள்ளூர் அரசியலாக்கும் குறுகிய வட்டத்திலிருந்து இங்குள்ள கட்சிகள் வெளிவரவேண்டும்.

ஒன்றே ஒன்றை மட்டும் அனைவரும் உணர்ந்து ஒன்றுசேர வேண்டும். அங்கே துடிப்பது நமது உயிர், தமிழ் உயிர். - என்றுள்ளது. (அ-1)

# மரண அறிவித்தல்கள்

## நடராசா மயில்வாகனம்



யாழ்ப்பாணம், 40/8, நாயன்மார் வீதி, நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா மயில்வாகனம் (பத்தர்) 12.11.2007 திங்கட்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசா - நாகம்மா தம்பதியின் மகனும் காலஞ் சென்ற செல்லப்பா - இரத்தினசிரோன்மணி (குங்குமம்) தம்பதியரின் அன்பு மருமகனும் தவமணி தேவியின் பாசமிகு கணவரும், அன்பரசி (ஜேர்மனி), இரவீந்திரன் (ஜேர்மனி), சுபாசினி (சுவிஸ்), சத்தியானந்தன் (ஜேர்மனி), சிவானந்தன் (ஜேர்மனி), கணேஷானந்தன் (ஆசிரியர், கணேஸ் ஆட்ஸ்) ரேவதி, சுந்தரவதனி ஆகியோரின் தகப்பனாரும் பாஸ்கரன், தேனுகா, சிற்சபேசன், நவலோஜினி, அனுசியா, சதுஸ்ரதி, சிவனேசன் மகேந்திரன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.11.2007) வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 40/8, நாயன்மார் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (67946)

தகவல்: மகன் (கணேஸ் ஆட்ஸ்)

## திருமதி சந்திரசேனன் இராஜேஸ்வரி

### (பெற்றம்மா)



நாச்சிமார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் நல்லூர்,நாயன்மார் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சந்திரசேனன் இராஜேஸ்வரி நேற்று (14.11.2007) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை - திரவியம் தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற கனகரத்தினம் - மரகதம் தம்பதியரின் மருமகளும் சந்திரசேனனின் அன்பு மனைவியும் மைதிலி (கனடா), குமுதினி(லண்டன்), விக்னா(சுவிஸ்), தர்சினி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும் சுகுமார்(கனடா), மனோகரன்(லண்டன்), சிவலோயன்(சுவிஸ்), மலர்ராஜ்(கனடா) ஆகியோரின் மாமியும் குபேந்திரன் (கிளிநொச்சி), அரியேந்திரன்(கிளிநொச்சி), ஜெயராணி (கிளிநொச்சி), ஜெயாஸ்வரி, ஜசிந்தா(ஜேர்மனி)ஆகியோரின் சகோதரியும் பாலகிருஷ்ணன், காலஞ்சென்ற தெட்சணாமூர்த்தி, தங்கேஸ்வரி, புவனேஸ்வரி,சறோஜினி, காலஞ் சென்ற சண்முகலிங்கம், சற்குணலிங்கம்,செல்வராணி ஆகியோரின் மைத்துனியும் தியாஷன், விஷாலி, அபிராம், நிக்கேஷன், தனக்ஷன் ஆகியோரின் பேர்த்தியு மாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(15.11.2007) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இல.49,நாயன்மார் வீதி, நல்லூர் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

49, நாயன்மார் வீதி, நல்லூர்,தொ.பே.:0212225752 (67949)

தகவல்: குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## அன்னப்பா வின்சன் ஜேரோல்ட்

### (ராசதுரை)



ஈச்மோட்டையை வசிப்பிடமாகக் கொண்ட அன்னப்பா வின்சன் ஜேரோல்ட் (ராசதுரை) நேற்று(14.11.2007) புதன்கிழமை பிரான்சில் காலமானார்.

அன்னார் எலன்திரேசா லீலாவதி(பேபி) அவர்களின் அன்புக்கணவரும் றீற்றாஜெசி, றெசிற்றா யஸ்மின்(அமெரிக்கா), றோய் ஜெவ்றி (மன்னார் RDA),றெமிஜியா பிறின்ஸ்(பிரான்ஸ்), றெஜினோல்ட்(லண்டன்), றெமியஸ்(பிரான்ஸ்), றுவ்வினா ஜெசிக்கா (வவுனியா),ஜெனிபர் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் வின்ஸ்ரன் ஸ்ரனிஸ்லோஸ்(றஞ்சன் - பஹ்ரைன்),தங்கராஜா (அமெரிக்கா), செல்வி (மன்னார்),நதி (பிரான்ஸ்), தேவி (லண்டன்), ஜெயந்தி(பிரான்ஸ்),காலஞ்சென்ற பிறேம்குமாரன், யூட் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு பிரான்ஸில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

Romeo Prince, 80 Rue. Stephen Son, Paris - 75018 France. (67950)

16,றக்கா லேன், சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

தகவல்: வின்சன் ஜேரோல்ட் எலன் திரேசா லீலாவதி(மனைவி).

## திருமதி கோபாலசிங்கம் தனலட்சுமி



கொழும்புத்துறை,இல.20,4ஆம் குறுக்குத் தெருவை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி கோபாலசிங்கம் தனலட்சுமி காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கோபாலசிங்கத்தின் அன்பு மனைவியும் திருலோகநாதன் (நோர்வே), விமலநாதன், கமலநாதன் (சுவிஸ்), அமுத ஆகியோரின் பாசமிகு தாயும் உமாதேவி, மலர்விழி, மஞ்சு, துரைசிங்கம் (ரெலிக்கொம்) ஆகியோரின் பாசமிகு மாமியும் பிரசாத், மதுசாந், பிரியங்கா, ஆத்தி, அபிணா, பிரபா, பிரகாஸ், றஜீவன் , றஜிதா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(15.11.2007) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் ஒரு மணிபளவில் தகனக்கிரியைக்காக துண்டி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: M.துரைசிங்கம் (ரெலிக்கொம்).

## சின்னப்பொடி அருமைநாயகம்

### (பெரியதம்பி)



நாவாந்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பொடி அருமைநாயகம் நேற்று(14.11.2007) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் பாக்கியத்தின் அன்புக் கணவரும் பத்மநாதன், மும்மூர்த்தி, மதி இன்பராசா, தயாதேவி, மோகன்தாஸ், ஆனந்தமோகன், குணசாந்தன், பஞ்சாட்சரம், ரதீவதனி ஆகியோரின் அன்புத் தந்தையும் தவமலர், காலஞ்சென்ற செல்வராணி, ரவீந்திரன், மேரிகரோலின், ரஞ்சினி, ஜெயவேணி, கிரிஜா, சிவதர்சினி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.11.2007) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வில்லூன்றி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் ,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

70, கடற்கரை வீதி, நாவாந்துறை, யாழ்ப்பாணம். (67947)

தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15.11.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.